DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

HomeLife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
PROPERTY MAX
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc., Brokerage
Independently Owned and Operated
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
* Family sponsorship;
* Super visa for parents and grandparents including health insurence;
* Citizenship;
* Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road
Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial
Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1541
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday October 17, 2025

# மிசிசாகா மாநகரின் Trillium Hospital - Trillium Health Foundation வைத்தியசாலைக்கு 100,000 டாலர்கள் நன்கொடை வழங்கிய சரவணபவான் சைவ உணவக நிறுவனம்




கனடா வாழ் தமிழ் பேசும் வர்த்தகப் பிரமுகரும் மக்களின் தேவைகளை அறிந்து பரோபகார உதவிகளை வழங்குபவருமான கணேசன் சுகுமார் அவர்களை தலைவராகக் கொண்டு இயங்கும் **Sugshe Group of Companies** குழுமத்தின் கீழ் இயங்கும் சரவணா பவன் சைவ உணவக நிறுவனமானது நமது சமூகத்திற்குள் சுகாதாரம் மருத்துவம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான அதன் உன்னத நோக்கங்களுக்கு ஆதரவு வழங்கும் நீண்ட கால திட்டத்தின்படி மிசிசாகா நகரில் அமைந்துள்ள **Mississauga Trillium Hospital Ontario Trillium FoundationTrillium Health** வைத்தியசாலைக்கு $100,000 நன்கொடை அளித்துள்ளது என்ற செய்தியை இங்கு பகிர்ந்து கொள்வதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.
(தொடர்ச்சி 12ம் பக்கம்)

# மொன்றியால் "மதுரகான மன்ற" மாணவி செல்வி மிதுலா கனகசபையின் சங்கீத அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற்றது



நீண்டகாலமாக மொன்றியால் மாநகரில் இயங்கிவரும் மதுரகான மன்றத்தின் மாணவியும் அதன் நிறுவனர் செல்வமலர் மதுரநாயகம் மற்றும் சங்கீத ஆசிரியை செல்வி நயனி மதுரநாயகம் ஆகியோரின் மாணவியுமான செல்வி மிதுலா கனகசபையின் சங்கீத அரங்கேற்றம் கடந்த 11ம் திகதி சனிக்கிழமையன்று மொன்றியால் மாநகரில் உள்ள வுாநயவசந டீநயரடிழளை அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

இசை அரங்கேற்றத்திற்கு பக்கவாத்தியக் கலைஞர்களாக மிருதங்க இசைவாருதி வாசுதேவன் இராஜலிங்கம்- மிருதங்கம், மிதுரன் மனோகரன்- வயலின். திருவரங்கன் தபோதரன்- கடம். மோகனன் ரவீந்திரன்- மோர்சிங். செல்வி அசீரா தாமோதரம்பிள்ளை ஆகியோர் தங்களை அர்ப்பணித்தும் தங்கள் அனுபவத்தை அந்த மேடையில் சமர்ப்பித்தும் மிதுலா அவர்களின் அரஙகேற்றத்தை "தூக்கி நிமிர்த்தினார்கள் என்றால் அது மிகையாகாது.
(தொடர்ச்சி 12ம் பக்கம்)




தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
PRIME LEGAL SERVICES
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851


என்றென்றும் உங்கள் இல்லங்களிலும்,
உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்க
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!


Happy Diwali
ONTARIO
Aris Babikian
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT
Constituency Office:
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
Tel: 416-297-6568 Email: aris.babikianco@pc.ola.org

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00
பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# தாயகத்திலும் கனடாவிலும் விபத்துகளாலும் கவனயீனமான சிகிச்சைகளினாலும் எம் சமூகம் அநியாயமாகப் பறிகொடுக்கும "விலைமதிக்க முடியாத" உறவுகளின் உயிர்கள்

பல்வேறு காரணங்களினால் எம் தாயக மண்ணை விட்டு மேற்குலக நாடுகளுக்கு எம் உறவுகள் புலம் பெயர்ந்து வந்தாலும் எம் தாயகம் பற்றிய சிந்தனை மற்றும் அபாரமான அக்கறை போன்ற காரணத்தினால் எம் மண்ணிலிருந்து கிடைக்கும் செய்திகள் மற்றும் காணொலிகளின் மீது செலுத்தும் கவனமும் அபாரமானது என்பதை எமது தாயக உறவுகளும் நன்கு தெரிந்தும் அறிந்தவர்களாக அங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

2009ம் ஆண்டு வரை எமது வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தின் போதும். தினமும் கிடைக்கும் செய்திகளில் மனது பதற்றமும் பயமும் கொள்ளும் வகையில் சம்பவங்கள் இடம்பெறுவதை இங்குள்ளவர்கள் அறிநது கொண்டிருந்தார்கள். இழப்புக்களும். அரச பயங்கரவாதத்தின் உச்சமான படுகொலைகளும். காட்டிக் கொடுப்புகளும் ஆயிரக்கணக்கான எம் உறவுகளின் உயிர்களை நாம் காவு கொடுக்க காரணமான சம்பவங்கள் அல்லது தாக்குதல்கள் பற்றி தகவல்கள் கிட்டும் போது நாம் தவித்தபடி எம் நாட்களை கழித்திருக்கின்றோம்.

மேற்குலக நாடுகளில் வாழும் எம் உறவுகள், தாயகத்தில் உள்ளவர்கள் அனுபவிக்கும் துயரங்களைப் போன்று எதிர்கொள்ளாவிட்டாலும் அங்கு எந்த ஊரில் எம்மவர்களின் உயிர்கள் பறிக்கப்படுகின்றனவோ, அப்போதெல்லாம் எம் இனம் சார்ந்த இழப்புக்கள் என்ற வகையில் அவைகளுக்காக கண்ணீர் வடித்தபடி தங்கள் வாழ்க்கையை தொடர்ந்தார்கள்.

ஆனால் 2009ம் ஆண்டிற்கு பின்னர். "யுத்தம் ஓய்ந்தது, ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டுள்ளன, சமாதானம் நிலவுகின்றது" என்ற செய்திகளும் காணொலிகளும் எம் கண்களையும் செவிகளையும் எட்டுகின்றபோது, ஆறுதலடைந்த புலம் பெயர்ந்தஉறவுகள் தொடர்ந்து வந்த நாட்களில் அரச பயங்கரவாதம் எம் பிரதேசங்களில் தொடர்வதையும்.மக்களுக்குச் சொந்தமான காணிகள் படையினரின் தேவைகளுக்காக அபகரிப்படுவதையும். காணிகளின் உரிமையாளர்களான எம்மவர்கள் விரட்டப்பட்டு அகதிகளாக காடுகளில் வாழ்வதையும் சோகத்துடன் அறிந்து அவர்களுக்காக வருந்தினோம். அவ்வாறானவர்களின் வாழ்வாதாரத்திற்காக எமது வெளிநாட்டு உறவுகள் தாரளமாக தமது கைகளை நீட்டினார்கள். வீடற்றவர்களுக்கு சிறிதான இல்லங்களை அமைத்துக் கொடுத்தார்கள்.

இன்னொரு பக்கத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் வன்னியில் தலைமையகத்தைக் கொண்டு போராட்டத்தையும் பேச்சுவார்த்தைகளையும் நகர்த்திக் கொண்டிருக்கையில் அமைதியாக இருந்த எமது பாராளுமன்ற பிரதிநிதிகள் 2009 இற்கு பின்னர் தென்னிலங்கையில் மாறி மாறி ஆட்சி பீடம் ஏறிய அனைத்து இனவாதிகளோடும் சமாதானம் பேசுவதாக "பாசாங்கு செய்து கொண்டும் சன்மானங்களைப் பெற்றுக் கொண்டும் சுகபோக வாழ்க்கையை சுதந்திரமாக நடத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் நியாயமான முறையில் எம் மக்களுக்காக பாராளுமன்றத்திலும் வெளியிலும் குரல் எழுப்பிய சில அரசியல் தலைவர்கள் தென்னிலங்கை கொடுங்கோலர்களின் ஏவல்களான இராணுவக் காடையர்களால் கொலை செய்யப்பட்டார்கள். ஆனால் தமிழ் மக்களுக்காக "உழைப்பவர்கள்" போல பாராளுமன்றத்தில் நாட்களைக் களித்த தமிழ் அரசியல்வாதிகளின் "கஜானாக்கள்" நிரம்பிய வண்ணம் இருந்தன. தந்திரசாலிகளாக விளங்கிய சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களை வளர்த்துக் கொண்டார்கள்.

நாம் இந்த வாரம் இங்கு பகிர்ந்து கொள்ள முனைந்த விடயங்களிலிருந்து விலகிச் செல்லாமல் இனி வரும் வரிகள் அவை பற்றிய வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள விழைகின்றோம்.


2009ம் ஆண்டிற்குப் பின்னர் "அமைதி வரும்" என்று எண்ணியிருந்த எமது மக்களுக்கு போதைப் பொருள் தாராளமாக தமிழர் பிரதேசங்களை நோக்கி வந்து கொண்டிருந்தது. இதனால் எமது தமிழர் மண்ணில் இளைஞர்கள் பலர் போதைப் பொருளுக்கு அடிமைகளாகிப் போக அங்கு விபத்துக்களும் இறப்புககளும் அதிகரித்தன.

குறிப்பாக, அண்மைக் காலங்களில் எமது தாய் மண்ணில் தினமும பலர் மரணத்தைத் தழுவுகின்றார்கள். பல மரணங்கள் விபத்துக்களாகவும் பல மரணங்கள் கவனயீனமாக வைத்திய சிகிச்சைகளினாலும் சம்பவிக்கின்றன. அதற்கு மேலாக போதைப் பொருள் பாவனைகளால் அவற்றுக்கு அடிமையானவர்களை பணம் கொடுத்து "கொலையாளிகளாக - மாற்றும் வன்மச் செயல்களும் அங்கு அதிகரித்துள்ளன.

எமது பத்திரிகை அலுவலகத்திற்கு தாயக செய்தியாளரகள் அனுப்பி வைக்கும் செய்திகளில் தினமும் விபத்து மரணங்களும், வைத்தியசாலைகளில் சம்பவிக்கும் மரணங்களும் தாக்குதல் சம்பவங்களில் சம்பவிக்கும் மரணங்களும் விபத்துக்களில் அநியாயமாக உயிர் பிரியும் மரணங்களும் அடங்கிய செய்திகள் தினமும் வந்த வண்ணம் உள்ளன.

இவ்வாறான மரணங்களை நாம் அழுதுவிட்டுப் போகின்ற இழப்புக்கள் என்று பார்க்காமல், அவை எம் உறவுகளின் விலைமதிக்க "விலைமதிக்க முடியாத" உறவுகளின் உயிர்கள் என்றே எண்ணி கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம்!

ஆய்வு நூல் வெளியீடு அழைப்பிதழ்





Dr. புட்பா கிறிட்டி Ph.D. அவர்கள் எழுதிய
"நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் தமிழ், சமய, சமூகப்பணிகள்"

காலம் : நவம்பர் 16, 2025, ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 6 மணி
இடம் : புனித ஆரோக்கிய மாதா ஆலய மண்டபம்
(Our lady of Good Health)
131 Birchmount Rd. Toronto, ON, M1N 3J7
(Birchmount and Danforth Avenue)

அன்புடையீர், வணக்கம்.

எனது முனைவர் பட்ட ஆய்வினை தமிழ் அறிஞர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் புகழினை உலகிற்கு உணர்த்தும் வகையில் அதனை ஒரு இலக்கியமாக படைத்துள்ளேன். அதன் வெளியீட்டு விழாவினை சிறப்பாக கொண்டாட உங்களை அன்புடன் அழைக்கின்றேன்.

இப்படிக்கு அன்புடன்
முனைவர். புட்பா கிறிட்டி
மற்றும் வெளியீட்டு விழாக் குழுவினர்

தொடர்புகளுக்கு : 647 703 5538

உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?



Legalize your basement now!

* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets



416-706-8160 OR 416-893-3216

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வவுணதீவில் வயல் நிலத்தில் மீட்கப்பட்ட மோட்டார் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டு அழிக்கப்பட்டன!

கனகராசா சரவணன்



மட்டு வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள கற்ப கேணி வயல் பிரதேசத்தில் மீட்கப்பட்ட மோட்டார் குண்டுகள் உட்பட்ட வெடி பொருட்களை 14ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை நீதிமன்ற அனுமதி பெற்று விசேட அதிரடிப்படையின் வெடிக்கவைத்து அழித்துள்ளதாக வவுணதீவு பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த வயலில் சம்பவ தினம் ஞாயிற்றுக்கிழமை வேளாண்மை நடவடிக்கைக்காக வயலின் உரிமையாளர் உழவு இயந்திர மூலம் நிலத்தை பண்படுத்தும் போது நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த வெடி பொருட்களை கண்டு பொலிசாருக்கு தெரியப்படுத்தினர்.

இதையடுத்து பொலிசார் விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்கும் படைப்பிரிவு வரவழைக்கப்பட்டு புதைக்கப்பட்டிருந்த 5 மோட்டார் குண்டுகள், ஒரு ஆர்.பி.ஜி. குண்டு, மற்றும் பிளாஸ்டிக்கான் ஒன்றில் ஆயுதங்களுக்கு பயன்படுத்தப்பட்ட தோட்டாக்களை மீட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட வெடி பொருட்களை நீதிமன்ற உத்தரவு பெற்று விசேட அதிரடிப்படையினர் அந்த பகுதியில் வைத்து வெடிக்க வைத்து அழித்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த பிரதேசமானது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரா. சாணக்கியன் மகிந்தவின் காட்டு சட்டத்தை மட்டக்களப்புக்கு கொண்டுவரக் கூடாது

## மாவட்ட ஈபி.டி.பி கட்சி ஒருங்கிணைப்பாளரும் வர்த்தகரான அந்தனிசில் ராஜ்குமார்



கடந்த காலத்தில் ரணில் விக்கிரம சிங்கவிடம் 400 மில்லியன் ரூபாவை பெறும் போது சர்வதேச விசாரணையை கோர மாட்டோம் அல்லது சிங்கள குடியேற்றங்களை தடுக்க மாட்டேன் என்றா? உடன்படிக்கை செய்து கொண்டது? இவ்வாறு சஜித் பிரேமதாசவின் மேடையில் ஏறி வாக்களிக்குமாறு கூறியபோது சஜித்துடன் என்ன என்ன உடன்படிக்கை செய்து கொண்டார்கள் என மக்களுக்கு நா. உறுப்பினர் இரா.சாணக்கியன் தெளிவுபடுத்த வேண்டும் அதேவேளை மகிந்தவின் காட்டு சட்டத்தை மட்டக்களப்புக்கு கொண்டுவரக் கூடாது என மாவட்ட ஈபி.டி.பி கட்சி ஒருங்கிணைப்பாளரும் வர்த்தகரான அந்தனிசில் ராஜ்குமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வொய்ஸ் ஒப் மீடியா ஊடக கற்கை நிலையத்தில் 13ம் திகதி அன்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த மாதம் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் என் மீது கடுமையான பொய் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளார் அந்த பொய்குற்றச்சாட்டானது தேசத்துக்கு மகுடம் என்ற திட்டத்தில் கிழக்கு மாகாணத்திற்கு மீனவர்களுக்காக 9 மண்ணெண்ணை நிரப்பும் நிலையங்கள் வழங்கப்பட்டது.

இதில் 7 மண்ணெண்ணை நிலையங்கள் செயலிழந்து இயங்கா நிலையில் பாழடைந்துள்ளதுடன் இரண்டு மண்ணெண்ணை நிலையங்கள் மாத்தியம் இயங்கி வருகிறது இந்த இரண்டையும் கடற் தொழில் நீரியல் வள திணைக்களம் அந்தந்த பகுதி மீனவர் சங்கங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கினார்.

இதன் பின்னர் மீனவர் சங்கங்களில் இருந்து நான் பகிரங்க கேள்வி மனுவில் குத்தகை அடிப்படையில் பாலமீன்மடு, களுவங்கேணி ஆகிய இரண்டு மண்ணெண்னை நிரப்பு நிலையங்களை நான் பெற்றிருக்கிறேன் அதனை தவறாக அரச அதிகாரிகளுக்கு முன்னாள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் எனக்கு வழங்கப்பட்டது என அவர் கூறியிருப்பது நான் வன்மையாக கண்டிக்கின்றேன் அதேவேளை அவரிடம் ஆவணங்கள் இருப்பின் என்னுடன் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு சவால் விடுக்கின்றேன்.

நான் சட்டத்திற்கு முரணாக அதை பெற்றுக் கொள்ளவில்லை அதை டக்ளஸ் தேவானந்த தரவும் இல்லை. கடந்த காலத்தில் தேசத்துக்கு மகுடம் திட்டத்தின் கீழ் மகிந்த ராஜபக்சவினால் மீனவர் சங்கங்களின் வளர்ச்சிக்கு நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் பாலமீன்மடுவில் இருக்கின்ற மீனவர் சங்கங்களுக்கு வழங்கப்பட்டது.

இதனை நான் அவர்களிடமிருந்து குத்தகையின் அடிப்படையில் உரிய முறையில் சட்டத்தரணிகள் ஊடாக கால காலமாக பெற்று வருகின்றேன். இருந்தபோதும் அவர் களுவங்கேணியில் எனது குத்தகை உடன்படிக்கை முடிவுற்றதும் மீனவர் சங்கங்கள் தனக்கு கடிதம் வழங்கியதாகவும் எனக்கு வழங்க வழங்கவேண்டாம் எனவும் நான் சட்டத்திற்கு முரணான முறையில் அவற்றை இயக்கி வருவதாக பொய்யாக தெரிவித்துள்ளார்.

எனவே என்னிடத்தில் அத்தனை ஆவணங்களும் இருக்கின்றதுடன் எனது குத்தகை காலம் 16-5-20025 முடிவுற்றதுடன் மீனவர் சங்கங்கள் விசேட பொதுக்கூட்டம் நடத்தி அதில் அத்தனை மீனவர்கள் மீனவர் சங்க தலைவர்கள் மற்றும் கடற்றொழில் நீரியல் திணைக்கள பரிசோதகர் உட்பட்டவர்கள் அதனை எனக்கு இன்னும் ஒரு வருட காலத்துக்கு வழங்குமாறு கையொப்பமிட்டுள்ளனர்.

இது களுவங்கேணி மீனவர் சங்கத்துக்கு வழங்கப்பட்டது இதனை அவர்களிடமிருந்து நான் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்டேன் இது முன்னாள் அமைச்சர் டக்ளஸ் எனக்கு வழங்க வில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் பொய்யான குற்றச்சாட்டை வன்மையாக கண்டிக்கின்றேன்.

அத்தோடு அவர் என் மீது தொடர்ச்சியாக பொய் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றமை க்கான காரணம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவினால் வழங்கப்பட்ட 400 மில்லியன் ரூபாய் மோசடி இருப்பதை அறிந்து இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவிற்கு நான் முறைப்பாடு செய்திருக்கின்றேன் எனவே சாட்சிகளை அச்சுறுத்துவதற்காகவே எனது தொழிலை முடக்குவதற்கு முயற்சி செய்து இவ்வாறு வேலைகளை செய்து என்னை அச்சுறுத்துகிறார்.

கடந்த காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவுடன் 400 மில்லியன் ரூபாவை பெறும் போது சர்வதேச விசாரணையை கோரமாட்டோம் என்றா? அல்லது சிங்கள குடியேற்றங்களை தடுக்கமாட்டோம் என்றா? உடன்படிக்கை செய்து கொண்டாரா? இவ்வாறு எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் மேடையில் ஏறி மக்களை அவருக்கு வாக்களிக்குமாறு கூறியபோது சஜித்துடன் என்ன உடன்படிக்கை செய்து கொண்டிர்கள்?

நீங்கள் மட்டக்களப்பு மக்களை மடையன் என்று நினைத்து நீங்கள் உங்கள் தேவைக்கு ஏற்றால் போல பயன்படுத்த கூடாது மக்கள் அடுத்த தேர்தலில் சரியான பாடம் புகட்டுவார்கள் என்பதுடன் 65 ஆயிரம் வாக்குகளை பெற்ற பொறுப்பு வாய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஆன நீங்கள் ரணில் மற்றும் சஜித்துடன் என்ன உடன்படிக்கை செய்து கொண்டது என மக்களுக்கு தெளிவுபடுத்துங்கள்,

அத்தோடு களுவங்கேணியில் உள்ள மீனவர் சங்கமானது மண்ணெண்னை விநியோகத்தை துண்டித்தது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் அதற்கு பின்னர் அவர்கள் சிபாரிசு செய்வதாக பதில் கடிதம் அனுப்பியுள்ளது டன் கடற்றொழில் அமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

அதன்பின்னர் கடற் தொழில் நீரியல் வள திணைக்கள பணிப்பாளர் ஜெனரல் மீண்டும் மீனவர் சங்கத்துக்கு ஊடாக எனக்கு ஒரு வருடத்துக்கு வழங்குமாறு கூறியுள்ளார் அதற்கு நீங்கள் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றீர்கள் அரச அதிகாரிகளை அச்சுறுத்வது எதற்காக? நீங்கள் கடந்த காலங்களில் இங்கு இயங்கி வந்த ஆயுத குழுக்கள் போன்று செயற்படுகின்றீர்களா?

சிறிலங்கா சுதந்திர கட்சி ஊடாக அரசியலுக்கு பிரவேசித்து மஹிந்த ராஜபக்ஷவின் மடியில் தவந்த போது தான் எனக்கு கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனரத்தின பாலமீன்மடு எரிபொருள் நிலையம் வழங்கப்பட்டது எனவே உங்கள் பொய் முற்று முழுதாக வெளிச்சத்துக்கு வருகிறது மகிந்த ராஜபக்ஷ வின் காட்டு சட்டத்தை இங்கு கொண்டுவரக் கூடாது தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை என்ற பழமொழி போல நீங்கள் அரசியலில் புகுந்த மகிந்தவின் காட்டு சட்டத்தை தமிழரசு கட்சிக்குள் இருந்து கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் கொண்டுவரக் கூடாது என கேட்டுக் கொள்கிறோம்.

அதேவேளை என் மீது வைத்த பொய் குற்றச்சாட்டுகள் அனைத்துக்கும் உங்களுக்கு எதிராக நான் நீதிமன்றத்திலும் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்து தகுந்த நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன்னால் உணவகம் தீப் பற்றியது!

## அதைக் கட்டுப்பாட்டில் கொண்டு வர 2 மணி நேர போராட்டம்




மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு முன்னால் அமைந்துள்ள பூட்டியிருந்த உணவகம் ஒன்று திடீரென தீப்பற்றியதையடுத்து உணவகத்தில் நித்திரையில் இருந்த 7 பணியாளர்களை தெய்வாதீனமாக உயிர் தப்பியதுடன் தீயணைப்பு படையினர் மற்றும் பொலிசார் இணைந்து பல மணி நேரத்தின் பின்னர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் கடை தொகுதி முற்றாக தீயில் எரிந்து சாம்பலாகிய சம்பவம் கடந்த 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 11.00 மணிக்கு இடம் பெற்றதை அடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இது பற்றி தெரியவருவதாவது, குறித்த உணவகம் வழமைபோல சம்பவ தினம் இரவு 9.00 மணிக்கு மூடியதுடன் அங்கு வேலை செய்துவரும் 7 இளைஞர்களும் உணவகத்தில் நித்திரைக்கு சென்றுள்ளனர்.

இந்த நிலையில் உணவகத்தில் இருக்கும் மின்சார பிரதான சுவிஸ் இருந்து மின் ஒழுக்கு சுமார் 10.30 இரவு மணியளவில் காரணமாக தீப்பற்றி எரிவதை அங்கு நித்திரைக்குச் சென்ற ஒருவர் கண்டு கொண்ட நிலையில் தீ பிரகாசமாக எரிய தொடங்கியதை அடுத்து அங்கு நித்திரையில் இருந்த 6 பேரையும் எழுப்பி கொண்டு கடையின் கதவை உடைத்து கொண்டு வெளியேறினர்.

அவர்கள் அங்கிருந்து வெளியேறி 5 நிமிடத்தில் கடைத்தொகுதியில் பாரிய தீ ஏற்பட்டு பெரும் தீச்சுவாலை அடுத்து அருகில் இருந்த வீடுகளில் இருந்தவர்கள் பெரும் பதற்றம் அடைந்தனர்.

இதனையடுத்து மாநகரசபையின் தீயணைப்பு படை மற்றும் பொலிசாரின் தீயணைப்பு பிரிவினர், காத்தான்குடி நகரசபை தீயணைப்பு படை இணைந்து நள்ளிரவு 12.30 மணிக்கு பல போராட்டத்தின் மத்தியில் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதும் கடைதொகுதி முற்றாக எரிந்து சாம்பலாகி உள்ளது. இந்த தீ விபத்து மின் ஒழுக்கு காரணமாக ஏற்பட்டுள்ளதா பொலிசாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அதேவேளை சம்பவ இடத்துக்கு மாநகரசபை முதல்வர் சிவம் பாக்கியநாதன், பிரதி முதல்வர் வைரமுத்து தினேஷ்குமார், மாநகர சபை உறுப்பினர்களான மதன்,பிரதி, ஜனகன், தரண் ஆகியோர் வருகை தந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர ஈடுபட்டனர்.

இது தொடர்பான விசாரணைகளை மட்டு தலைமையக பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் ஆளுநர் செயலகம் முன் தொடரும் ஆசிரியர்களின் போராட்டம்!




வட மாகாண கல்வி திணைக்களத்தினால் சேவையின் தேவை கருதி என மேற்கொள்ளப்பட்ட ஆசிரிய இடமாற்றம் பாரபட்சமானதும் பழிவாங்கல் நோக்கமாக கருதும் நிலையில் குறித்த இடமாற்றத்தை உடன் இடைநிறுத்தி மீள மேற்கொள்ள வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் இன்றும் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்த போராட்ட களத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் வருகை தந்தனர்.





வட மாகாண கல்வி திணைக்களத்தின் சேவையின் தேவை கருதிய இடமாற்றத்தில் ஆசிரியர்கள் பழிவாங்கல் இடம்பெற்றுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சுட்டிக்காட்டினர்.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் குறித்த விடயம் தொடர்பில் ஆளுநருடன் கலந்துரையாடுவதாக தெரிவித்தனர்.

# உரும்பராய் கிழக்கு சிவ பூதநாதேஸ்வரருக்கு அடியவர்கள் பால்குடப் பவனி!

உரும்பராய் கிழக்கு, கரந்தன், நீர்வேலி எல்லைப் பகுதியில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்ற மனோன்மணி அம்பாள் சமேத சிவ பூதநாத ஈஸ்வர ஆலய பால்குடப்பவனி 14ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.



உரும்பிராய் கிழக்கு காளியம்மாள் ஆலயத்தில் இருந்து காலை 7.00 மணிக்கு பாற்குடப்பவனி ஆரம்பமாகி சிவ பூதநாதேஸ்வரர் ஆலயத்தை சென்றடைந்தது.

குறித்த ஆலயத்தின் கும்பாபிஷேகம் நிறைவுற்று அதன்பின் இடம்பெற்ற 45 நாள் மண்டல அபிஷேகத்தின் இறுதி நாளான அன்று 1008 சங்குகளால் சங்காபிஷேகம் இடம்பெற்ற இந்நாளில் சிவபெருமானுக்கு அடியவர்களால் பாற்குடப்பவனி நேர்த்தியுடன் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# வெளிநாட்டு அனுப்புவதாக கூறி யாழ்ப்பாணத்தில் 30 கோடி ரூபா மோசடி — சந்தேகநபருக்கு விளக்கமறியல்!

வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக கூறி பலரிடம் கோடிக்கணக்கான பணத்தினை பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டின் கீழ், யாழ்ப்பாணம் - அரியாலை பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், இவருக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் நான்கு முறைப்பாடுகளும், வவுனியாவில் நான்கு முறைப்பாடுகளும் காணப்படுகின்றன. அந்தவகையில் இது குறித்து யாழ்ப்பாணம் மாவட்ட நிதிசார் குற்றத்தடுப்பு பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபரை கைது செய்தனர். கைது செய்து விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை 14 நாட்களுக்கு விளக்கம் மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.



# அநுர அரசின் அமைச்சரவையில் "கிளீன் இந்திய எதிர்ப்பாளர்"?

## இந்தியாவை பகிரங்கமாக எதிர்த்ததுடன் வடக்கிற்கான துறைமுகங்கள், சிவில் விமான சேவைகள் அபிவிருத்தியில் இந்திய பங்களிப்பை, உதவிகளை நிராகரித்ததால் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடமிருந்து இந்த இரு அமைச்சுக்களை பறிக்க அநுர அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுத்ததா?

- கே.பாலா



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே .வி.பி.-தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிபீடமேறி ஓராண்டை நெருங்கிக்கொண்டிருக்கும் நிலையில் இந்த அரசின் அமைச்சரவை முதல் தடவையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளதுடன் புதிய அமைச்சர் ஒருவரும், புதிதாக 5 பிரதி அமைச்சர்களும் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் பிமல் நிரோசன் ரத்நாயக்க வீரக்கோன் எனப்படும் ஜே .வி.பி.யின் தேசிய அமைப்பாளரும் சபை முதல்வரும் அமைச்சருமனான பிமல் ரத்னாயக்கவின் 4 அமைச்சுக்களில் முக்கிய இரு அமைச்சுக்கள் பறிக்கப்பட்டுள்ளன.

பிரதமர் பதவியை பெறுவதற்காக உள் வீட்டு கலகம் செய்து வருபவர், பாராளுமன்றத்தில் சர்வாதிகாரியாக செயற்படுபவர், சட்டவிரோதமாக 323 கொள்கலன்கள் விடுவிப்பு சர்ச்சையில் சிக்கியவர், குடும்ப அரசியலை கடுமையாக எதிர்த்த ஜே .வி.பி.யில் தனது மனைவியையும் எம்.பி.யாக்கி அழகு பார்த்தவர், இந்தியாவுடன் பகையுடனும் வடக்கு அபிவிருத்தியில் இனவாத சிந்தனையுடனும் செயற்படுபவர் என்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கும் சர்ச்சைகளுக்கும் சொந்தக்காரரான பாராளுமன்ற சபை முதல்வரும் போக்குவரத்து,நெடுஞ்சாலைகள்,துறைமுகங்கள்,சிவில் விமான சேவைகள் அமைச்சருமான பிமல் ரத்னாயக்கவிடமிருந்து சர்ச்சைக்குரிய துறைமுகங்கள்,சிவில் விமான சேவைகள் ஆகிய இரு அமைச்சுக்கள் பறிக்கப்பட்டுள்ளமையே இன்றைய அரசியலில் பேசுபொருளாகியுள்ளது .

பிமல் ரத்நாயக்க ஜே .வி.பி.யின் சோசலிச இளைஞர் ஒன்றியத்தின் தலைவராக இருந்தவர். 2014 ஆம் ஆண்டில் ஜே .வி.பி.யின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் முதன் முதலாக ஜே .வி.பி.யின் வேட்பாளராக 2001ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு 4,240 விருப்பு வாக்குகள் பெற்று பாராளுமன்றம் சென்றார். பின்னர் 2004 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் ஜே .வி.பி.யின் சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி வேட்பாளராகப் போட்டியிட்டு 116,736 விருப்பு வாக்குகள் பெற்று பாராளுமன்றம் சென்றார்.

2010, 2015 ஆண்டு பாராளுமன்றத் தேர்தல்களில் ஜே .வி.பி.யின் வேட்பாளராக கம்பகா மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் சரத்சந்திர மாயாதுன்ன தனது பதவியைத் துறந்ததை அடுத்து, அவருக்குப் பதிலாக 2015 ஆம் ஆண்டு பிமல் ரத்நாயக்க தேசியப் பட்டியல் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அதன்பின்னர் 2024 ஆம் ஆண்டு பாராளுமன் றத் தேர்தலில் தேசியப்பட்டியல் எம்.பி.யாக கட்சியினால் நியமிக்கப்பட்டு பாராளுமன்ற சபை முதல்வராகவும் போக்குவரத்து,நெடுஞ்சாலைகள்,துறைமுகங்கள்,சிவில் விமான சேவைகள் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். இவரின் மனைவியான சமன்மாலி குணசிங்கவும் தற்போது அரசின் பாராளுமன்ற உறுப்பினராகவுள்ளார்.

2024 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தலைத் தொடர்ந்து தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட பிமல் ரத்நாயக்கவுக்கு பிரதமர் பதவியே இலக்காக இருந்தபோதும் ஜே .வி.பி.யின் பிரதியான தேசிய மக்கள் சக்தி மற்றும் இந்தியாவின் அழுத்தங்கள் காரணமாக தேசிய மக்கள் சக்தி உறுப்பினரான ஹரிணி அமரசூரியவையே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தொடர்ந்தும் பிரதமராக நியமித்துள்ள நிலையில் பாராளுமன்ற சபை முதல்வராகவும் அமைச்சராகவும் முக்கிய பதவிகள் பிமல் ரத்நாயக்கவுக்கு வழங்கப்பட்டன.

எனினும் பிமல் ரத்நாயக்க பிரதமர் பதவி தனக்கே வழங்கப்பட வேண்டுமென ஜே .வி.பி.யின் சில முக்கியமானவர்களுடன் இணைந்து உள் வீட்டுக்கலகத்தில் ஈடுபட்டதுடன் தான் பிரதமராவேன் என்ற நம்பிக்கையில் சில கருத்துக்களையும் பாராளுமன்றத்திலும் பொது வெளிகளிலும் வெளியிட்டிருந்தார் .இது தொடர்பாக ஜே .வி.பி.-தேசிய மக்கள் சக்தி மட்டத்தில் நடந்த சந்திப்பொன்றில் "" பாராளுமன்றத் தேர்தலில் ஜே .வி.பி.-தேசிய மக்கள் சக்தி பெற்ற வாக்குகளில் பெரும்பான்மையானவை தேசிய மக்கள் சக்திக்குரிய வாக்குகள் என்பதினால் அக்கட்சி சார்பில் பிரதமராக ஹரிணி அமரசூரியவே தொடர்வார்""எனக்கூறி பிமல் ரத்நாயக்கவின் பிரதமர் பதவி ஆசைக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முற்றுப்புள்ளி வைத்தார்.

இவ்வாறான நிலையில் எதிர்க்கட்சிகள் ஜனாதிபதியை நேரில் சந்தித்து முறையிடும் அளவுக்கு எதிர்க்கட்சிகளின் உரிமைகளை பாராளுமன்றத்தில் சபை முதல்வராக பிமல் ரத்நாயக்க.முடக்கினார். அதுமட்டுமன்றி அமைச்சராகவும் அவர் ஒரு சர்வாதிகாரியாகவே நடந்து கொண்டார். இதனால் அமைச்சர் பிமல் ரத்நாயக்காவின் கீழ் பணியாற்ற வந்த பல அதிகாரிகள் தமது பதவிகளை இராஜிநாமாச் செய்யும் நிலையும் தற்போது வரை தொடர்கின்றது.இலங்கை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர்,இலங்கைபோக்குவரத்துச் சபையின் தலைவர்,தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் தலைவர், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம், இலங்கை ரயில்வேயின் மூத்த அதிகாரிகள் என்ற வரிசையில் இறுதியாக பிமல் ரத்நாயக்கவின் அமைச்சில் ஊடகச் செயலாளராக இருந்த சுரங்க லக்மல் செனிவிரத்ன இராஜிநாமா என இராஜிநாமாக்கள் தொடர்கின்றன.

இவ்வாறாக அவர் ஒரு சர்வாதிகாரியாக மட்டுமன்றி சர்ச்சைக்குரியவராகவும் உள்ளார். துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிவப்பு ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட 323 கொள்கலன்களை எவ்வித பரிசோதனைகளுமின்றி விடுவித்த சர்ச்சையில் துறைமுகங்கள் அமைச்சராகவுமிருந்த பிமல் ரத்நாயக்கவே பிரதான நபராக உள்ளார். நீண்ட காலமாக துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்த சர்ச்சைக்குரிய கொள்கலன்கள் விடுவிப்பினால் அநுரகுமார அரசு பெரும் நெருக்கடிகளை சந்தித்துள்ளதுடன் எதிர்கட்சிகளினால் கடுமையாகவும் விமர்சிக்கப்பட்டும் வருகின்றது. அக்கொள்கலன்கள் சிலவற்றில் போதைப்பொருட்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தற்போது சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இதனுடன் மட்டும் அவர் நின்று விடவில்லை. சீன சார்புக் கொள்கையுடைய அவர் இந்தியாவை பகிரங்கமாகவே எதிர்த்தார். இந்திய பிரதமரின் இலங்கை விஜயத்தின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் முரண்பட்டிருந்தார். இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியை விமான நிலையத்தில் வரவேற்கும் நிகழ்வு ,இராப்போசன விருந்துபசாரம் போன்றவற்றை ஜே .வி.பி.யை பிரதிநிதித்துவப்படுத்தும் சில முக்கிய அமைச்சர்கள் புறக்கணித்தனர். அதில் இவரும் ஒருவர் .அதுமட்டுமன்றி கொழும்பில் ஜனாதிபதி தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி , அதானியின் கொழும்புமேற்கு துறைமுக அபிவிருத்தி ,திருகோணமலை துறைமுக மேம்பாடு குறித்தும் அதன் அறிவிப்பை இந்திய பிரதமர் வரும்போது வெளியிடலாமென்றும் இந்த கூட்டத்தில் பேசப்பட்டபோது அவற்றையெல்லாம் நிராகரித்து ,அப்படிச் செய்யமுடியாதென கூறி அந்த கூட்டத்தில் இருந்து ஜே .வி.பி.அமைச்சர் ஒருவர் வெளியிறியிருந்தார். தற்போது அந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க என்றே கூறப்படுகின்றது.

பலாலி விமான நிலையம்,காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி ஆகிய இரண்டையும்- நான்கு மாதத்திற்குள் நிறைவு செய்துகாட்டுவோம் என்று முன்னர் அறிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க இன்று இவை இரண்டையும் அபிவிருத்தி செய்ய மாட்டோம் என அண்மையில் யாழ்ப்பாணத்தில் வைத்தே பகிரங்கமாக அறிவித்தார். பின்னர் பாராளுமன்றத்திலும் இதனை உறுதிப்படுத்தினார்.காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்கு இந்திய உதவியாக வழங்க முன்வந்த 63 மில்லியன் டொலர்களையும் அவர் நிராகரித்தார். இதனால் சீனா கடன் வழங்கும் போது அதனை பெற்றுக்கொள்ளும் அரசாங்கம் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்கு இந்தியா 63 மில்லியன் டொலரை வழங்க முன்வந்த போது அதனை ஏன் பெற்றுக்கொள்ளவில்லை என்ற கேள்விகள் எழுப்பப்பட்டன.

அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் இந்திய வி-ரோத செயற்பாடுகள் தொடர்பில் இந்திய தூ துவர் மட்டத்தில் ஜனாதிபதியிடம் முறைப்பாடுகள், குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அதனை உறுதிப்படுத்தும் விதமாகவே அமைச்சரவை மாற்றத்திற்கு முன்னர் தற்போது துறைமுகங்கள், சிவில் விமான சேவைகள் அமைச்சராக பதவியேற்றுள்ள அனுர கருணாதிலகவுடன் இந்திய தூதுவர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். அதனால் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் அமைச்சு பதவி பறிப்பில் இந்தியா பின்னணியில் இருந்ததாகவும் தகவல்கள் உள்ளன.

இந்தியாவுடன் அமைச்சர் பிமல் ரத்நாயக்க முரண்படும் நிலையை ஏற்படுத்தும் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் ஆகிய இரு அமைச்சுக்களை அவரிடமிருந்து ஒருபக்கத்தால் பறித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மறுபக்கத்தால் அவரை அமைதிப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி அமைச்சை வழங்கியுள்ளார்.எனவே 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கு ஏற்ப அரசாங்கத்தின் வளர்ச்சி இலக்குகளை விரைவுபடுத்துவதற்கும் திறம்படச் செய்வதற்குமே அமைச்சரவையில் மாற்றம் மேற்கொண்டதாக அரசாங்கம் அறிவித்தாலும் இது அநுரகுமார அரசும் இந்திய அரசும் இணைந்து மேற்கொண்ட ""கி-ளீன் இந்திய எதிர்ப்பாளர்""நடவடிக்கையாகவே பார்க்கப்படுகின்றது



# இலங்கைக்கு கடத்துவதற்காக உச்சிப்புளி கடற்கரையில் பதுக்கி வைத்திருந்த ரூ.3 லட்சம் மதிப்பிலான 1200 கிலோசமையல் மஞ்சள் மூட்டைகள் பறிமுதல்:

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

## சுங்கத்துறை அதிகாரிகள் நடவடிக்கை



(15-10-2025)

இலங்கைக்கு கடத்துவதற்காக உச்சிப்புளி அடுத்த சல்லித் தோப்பு கடற்கரையில் பதுக்கி வைக்கப் பட்டிருந்த இந்திய மதிப்பில் ரூ.3 லட்சம் மதிப்பிலான 1200 கிலோ சமையல் மஞ்சள் மூட்டைகளை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து ராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்திற்கு எடுத்துச் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

ராமநாதபுரம் கடற்கரை இலங்கைக்கு மிக அருகே இருப்பதால் இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லை ஊடாக இலங்கைக்கு கஞ்சா, சமையல் மஞ்சள், கடல் குதிரை, கடல் அட்டை உள்ளிட்ட பொருட்கள் அதிக அளவு கடத்தப்பட்டு வருகிறது.

இலங்கைக்கு கடத்தல் பொருட்கள் கடத்தப்பட்டு வருவதை சுங்கத்துறை அதிகாரிகள் கண்காணித்து கடத்தல் சம்பவங்களை தடுத்து நிறுத்தி பொருட்களை பறிமுதல் செய்வதுடன் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் கைது செய்து வருகின்றனர்.

இந்நிலையில் 14ம் திகதி செவ்வாய்க்கிழமை மதியம் சுங்கத்துறை அதிகாரிகளுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் உச்சிப்புளி அருகே களிமண்குண்டு அடுத்த சல்லித்தோப்பு கடற்கரை பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டபோது சந்தேகத்திற்கு இடமாக கடற்கரை ஓரம் கிடந்த மூட்டைகளை சோதனை செய்ததில் அதில் இலங்கைக்கு கடத்துவதற்காக சமையல் மஞ்சள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இதையடுத்து 28 மூட்டைகளில் இருந்த சுமார் 1200 கிலோ எடை கொண்ட சமையல் மஞ்சள் மூட்டைகளை பறிமுதல் செய்த சுங்கத்துறையினர் ராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்திற்கு எடுத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.



பறிமுதல் செய்யப்பட்ட சமையல் மஞ்சள் இந்திய மதிப்பு ரூ.3 லட்சம் இருக்கும் எனவும், மீனவர்கள் பொதுமக்கள் கடத்தல் சம்பவங்கள் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சுங்கத்துறை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

# சுமார் 8 கோடி செலவில் மூன்று மாடிக்கட்டிடம் புத்தளம், நாகவில்லு எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டது



- எஸ்.ஆர்.லெம்பேட் (14-10-2025)

புத்தளம், நாகவில்லு எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு தேவையாக இருந்த பாடசாலைக் கட்டிடம் 13ம் திகதி திங்கட்கிழமை பாடசாலையின் அதிபர் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் முயற்சியினால், 08 கோடி ரூபா நிதியில் அமைக்கப்பட்ட இக் கட்டிடத்தில் சுமார் 500ற்கும் மேற்பட்டவர்கள் அமருமளவான மண்டபம் உள்ளிட்ட வகுப்பறைகளை கொண்டவையாகும்.





இந்நிகழ்வுக்கு, பாராளுமன்ற உறுப்பினர் பைசல், முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் புத்தளம் மாவட்ட மக்கள் காங்கிரஸ் அமைப்பாளருமான தாஹிர், புத்தளம் பிரதேச சபையின் தவிசாளர் உள்ளிட்டவர்களுடன் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.


Thana Insurance Inc

T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker




THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."




# யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அனர்த்த விழிப்புணர்வு தொடர்பான முன்னாயத்த நிகழ்வு!

இலங்கை செய்திகள்
Sri Lanka News
பு. கஜிந்தன்

அனர்த்த விழிப்புணர்வு தொடர்பான முன்னாயத்த நிகழ்வானது 13ம் திகதி திங்கட்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.


அனர்த்தங்களினால் அதிகமாக பாதிக்கப்படுகின்ற இடங்களை மையப்படுத்தி அரச திணைக்களங்கள், பாதுகாப்பு பிரிவினர், சமூக அமைப்புகளை அழைத்து அவர்களுக்கான முன்னாயத்தமாக அன்றைய செயலமர்வு நடைபெற்றது.

மழை வெள்ளம், இடி - மின்னல், சுனாமி தொடர்பான விழிப்புணர்வு முன்னெச்சரிக்கையை ஏற்படுத்தும் நோக்கில் இந்த செயலமர்வு அமைந்தது.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தலைமையில், காவேரி கலா மன்றத்தின் அனுசரணையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.






கிளிநொச்சி உருத்திரபுரீசுவரர் ஆலய அறங்காவல் சபை
KILINOCHCHI URUTHIRAPURISVARAR TEMPLE BOARD OF TRUSTEE
RGD NO : HA/5/KI/15
URUTHIRAPURAM, KILINOCHCHI, SRI LANKA.

# கிளிநொச்சி – உருத்திரபுர சிவன் ஆலய பசுக்கள் இறைச்சிக்காக விற்பனை - அறங்காவலர் சபை குற்றச்சாட்டு!

கிளிநொச்சி - உருத்திரபுர சிவன் ஆலயத்தின் நல்ல இன பசு மாடுகள் இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அந்த ஆலயத்தின் அறங்காவலர்சபை குற்றம்சாட்டியுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த ஆலயத்தின் திருவிழாவுக்கு என ஒரு நிர்வாகக் குழுவானது தெரிவு செய்யப்பட்டது. அந்த குழுவாது அறங்காவலர் சபையின் கீழ், திருவிழா காலத்தில் மட்டுமே செயற்படும் வண்ணம் தெரிவு செய்யப்பட்டது.

திருவிழா நிறைவடைந்த பின்னரும் அந்த நிர்வாகம் தொடர்ந்து செயற்படுவதாகவும், அந்த நிர்வாகம் ஆலயத்தின் செயற்பாடுகளில் தன்னிச்சையாக தீர்மானம் எடுப்பதாகவும் அறங்காவலர் சபையால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆலயத்திற்கு நேர்த்திக்காக வழங்கப்பட்ட நல்ல இன பசுமாடுகள் இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்டதாகவும், இவ்வாறு விற்பனை செய்த 20 இலட்சம் ரூபா பணம் இதுவரை வங்கி கணக்கிற்கு வைப்புச் செய்யப்படவில்லை எனவும் குற்றம் சாட்டப்படுகிறது. உரிய அதிகாரிகளுக்கு இது குறித்து தெரியப்படுத்தியும் அவர்கள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றம்சாட்டப்படுகிறது.

எனவே திருவிழா குழுவானது ஆலயத்தின் நிர்வாக நிறைவேற்று குழு போன்று செயற்படுவதை தடுக்குமாறும், அந்த குழுவின் காலப்பகுதி நிறைவடைந்தமையால் அந்த குழுவை கலைக்குமாறும், இந்து கலாச்சார திணைக்களம் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்ப்பாண மாநகர சபைக்கு கால்நடை வைத்திய அதிகாரியை ஒப்பந்த அடிப்படையிலாவது நியமிக்க வேண்டும் என்கிறார் முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி!



கால்நடை வைத்திய அதிகாரியை ஒப்பந்த அடிப்படையிலாவது நியமியுங்கள் - யாழ். மாநகரின் முன்னாள் முதல்வர் வலியுறுத்து!

கால்நடை வைத்திய அதிகாரியை ஒப்பந்த அடிப்படையிலாவது நியமிக்க வேண்டும் என கோரிக்கைவிடுத்த யாழ். நகரின் முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, அதற்கான தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் முதல்வர் மதிவதனி தலைமையில் 14ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்றது.

இதன்போது இவ்வாறு வலியுறுத்திய அவர், மாநகர சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு ஆளுநருக்கு அதிகாரம் உள்ளது. அவ்விடயங்கள் குறித்து ஆளுநரிடம் முறையாகக் கோரும் பட்சத்தில் அதை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்று தெரிவித்தார்.

இதனிடையே யாழ்ப்பாண. மாநகரின் 10ஆம் வட்டாரத்தில் துரும்பங்குளம் தூர்வாராமல் இருப்பதால் மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில் அதனால் பெரும் அசௌகரியங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. அந்தவகையில் குறித்த குளத்தை துரிதமாக தூர்வார நடவடிக்கை எடுப்பது அவடியம் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும், யாழ். மாநகர சபைக்குரிய காணியை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்காமல் யாழ். மாநகர சபையே பொறுப்பேற்று அதன் வருமானத்தையும் ஈட்டலாம் என்று வலியுறுத்திய முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, வேம்படி சந்தியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றால் ஏற்படும் சனநெருசடியை குறைக்க நடவடிக்கை எடுப்பது அவசியம் என ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றியும் அது ஏன் நடைமுறைக்கு கொண்டுவரப்படவில்லை என்றும் கேள்வி எழுப்பினார்.

# விசேட தேவையுடையோருக்கான சர்வதேச தின தேசிய விழா இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்!



அகில இலங்கை விசேட தேவையுடையோருக்கான சர்வதேச தின தேசிய விழா இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்தப்பெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

விசேட தேவையுடையோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி ஜனாதிபதியின் பங்குபற்றுதலுடன் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள விசேட தேவையுடையோருக்கான தேசிய விழா தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் 13ம் திகதி திங்கட்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு மாவட்டச் செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

விசேட தேவையுடையோருக்கான தேசிய விழாவானது இம் முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதோடு இந் நிகழ்வில் வட மாகாணத்தின் 5 மாவட்டங்களில் இருந்து விசேட தேவையுடையோர் சுமார் 650 பேரின் பங்குபற்றுதலுடன் யாழ்ப்பாணம் கலாச்சார மண்டபத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) ராதா நாணயக்கார, மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் திரு. மு. நந்தகோபாலன், அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலக பணிப்பாளர் ஜெயமாலி விக்கிரமராட்சி, மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு. பா. ஜெயகரன், பிரதம கணக்காளர் திரு. எஸ். கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் திரு. சுரேந்திரநாதன், உதவி மாவட்ட செயலாளர் செல்வி உ. தர்ஷினி, சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. தனுஜா லுக்ஷாந்தன், கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் உதவி ஆணையாளர், கிறிஸ்தவ மதகுரு, மாவட்ட சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. தி. உமாசங்கர், அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## வீணாவின் கவிக்கணை

வாழ்க்கை நமக்கு
எவ்வளவு தான்
கற்றுக்கொடுத்தாலும்,
நாம் சில சமயங்களில்
நமக்கே தெரியாமல்
ஏமாந்து தான் போகிறோம்,
ஏமாறுபவர்கள்
தெளிவடையும் முன்னமே
ஏமாற்றுபவர்கள் அடுத்த
தாக்குதலுக்கு
தயாராகிவிடுகிறார்கள்!



# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சிறப்புற இடம்பெற்ற வீரமணி ஐயர் நினைவரங்கம்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 33 ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணியாற்றிய மகாவித்துவான் ம.த.ந. வீரமணி ஐயர் நினைவரங்கம் 14.10.2025 அன்று செவ்வாய் காலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக சேர் பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் பீடாதிபதி தவமைந்தன் றொபேட் அருட்சேகரன் கலந்து கொண்டு தமிழிசை வளர்ச்சியில் வீரமணி ஐயரின் பங்களிப்பு என்ற பொருளில் நினைவுப் பேருரை ஆற்றினார்.





வீரமணி ஐயர் பற்றிய ஆவணக் காணொளியை ஆசிரிய மாணவி கௌசிகா காட்சிப் படுத்தினார். நடனத்துறை விரிவுரையாளர் ரஜிதா சின்னத்துரை அதிதிக்கான அறிமுக உரையை ஆற்றினார். கலாசாலையில் உள்ள வீரமணி ஐயர் திருவுருவச் சிலைக்கான வழிபாடும் இடம்பெற்றது.

# யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம்

## அதிகார வரம்பு மீறப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு!

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம் கல்வி அமைச்சின் செயலாளரின் அதிகார வரம்பை மீறிய செயல் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ள நிலையில் குறித்த விடயம் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பில் வடமாகாண ஆளுநர் செயலகம் தமக்கு அறிக்கை தர வேண்டும் என எழுத்து மூலம் கடிதம் அனுப்பி உள்ளது.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது, கல்வி அமைச்சின் செயலாளரால் செய்யப்பட்ட விடயங்கள் சரியான செயல் ஒன்றை பிழையான வழியில் செய்தல் என்ற நடைமுறை ரீதியான அதிகார வரம்பு மீறல் ஆகும்.

மேற்கொள்ளும் தீர்மானங்கள் அதிகார வரம்பு மீறிய (untra Virus) செயலாக கொள்ளப்படுகின்றன. ஒரு பொது அதிகாரசபை ஒன்று தன் அதிகாரத்திற்கு வெளியே செயற்பட்டு அத்தகைய செயல் அதிகார வரம்பு மீறிய செயலாக வருதல் பின்வரும் 03 வகைக்குள் உள்ளடக்கப்படும்.

தவறான செயலொன்றை செய்தல், சரியான செயலொன்றை பிழையான வழியில் செய்தல், சரியான செயலொன்றை சரியான வழியில் பிழையான நோக்கத்திற்கு செய்தல். இதனடிப்படையில் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம் தொடர்பில் செயலாளரால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரையானது சரியான செயலொன்றை பிழையான வழியில் செய்தல் என்ற நடைமுறை ரீதியான அதிகார வரம்பு மீறலென ஆணைக்குழு கருதுகிறது.

மேலும் ஏற்கனவே வலுவில் இருந்த கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளினது இடமாற்றக்கொள்கை வலுவிழந்திருக்கும் நிலையில் புதிய இடமாற்றக்கொள்கையை உருவாக்கி அதன்படி மேற்கொள்ளவேண்டிய இடமாற்றங்களை தன்னுடைய தற்துணிவின் அடிப்படையில் மேற்கொண்டமையானது அதிகார வரம்பு மீறல் செயல் என ஆணைக்குழு கருதுகிறது.

இது அடிப்படை உ ரிமைகளில் சட்டத்தின்முன் யாவரும் சமம் என்பதோடு சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கும் உரித்துடையவர்கள் என்ற உறுப்புரை 12(1) இனை மீறும்செயல் என ஆணைக்குழு அவதானித்துள்ளது.

எனவே யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் நியமனம் வெளிப்படையானதாகவும் கடந்த கால வழக்கங்களை பின்பற்றி முதுநிலை ஒழுங்குவரிசையின் அடிப்படையிலும் மேற்கொள்வதற்கு வடமாகாண ஆளுநரால் மீள்பரிசீலனைச் செய்யப்பட வேண்டுமென இவ் ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.

யாழ்ப்பாண மேல் நீதிமன்ற வழக்கிலக்கமான 2397-18 எனும் வழக்கினை முறைப்பாட்டாளர் உதாரணம் காட்டியதன் அடிப்படையில் மேலும் குறித்த வழக்கிலே மூப்பு அடிப்படையில் வெற்றிடமாக உள்ள கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கு நியமனங்களை மேற்கொள்ள பிரதிவாதியான வடக்கு மாகாண கல்வி அமைச்சு அளித்த உறுதிமொழியின் அடிப்படையில் முடிவுறுத்தப்பட்டமையும் முறைப்பாட்டாளர் வாதத்திலே அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

வலயப்பணிப்பாளர் பதவியானது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்ட நியமனத்திற்கு முன்னர் ஒரு பதில் நியமிப்பு அடிப்படையில் ஒரு கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்பட்ட நிலையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படாத நிலையில் கல்வி அமைச்சின் செயலாளரின் சிபரிசின் அடிப்படையிலயே ஒருவரை நியமிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு தகுந்த காரணங்கள் காட்டப்படவில்லை.

பிரதிவாதத்திலே முறைப்பாட்டாளருக்கு எதிராக குற்றசாட்டுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. எனினும் குற்றசாட்டுப்பத்திரம் வழங்கப்ட்டதை மாத்திரம் அடிப்படையாயக கொண்டு முறைப்பாட்டளர் குற்றமிழைத்தவர் என அனுமானிக்கமுடியாது என ஆணைக்குழு கருதுகிறது.

எனவே குற்றசாட்டுப்பத்திரம் வழங்கப்பட்டமையினாலயே யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் சிபாரிசில் முறைப்பாட்டாட்டாளர் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவில்லை என்ற பிரதிவாதிகளின் வாதத்தை ஏற்கமுடியாது.

மேலும் ஏற்கெனவே யாழ்ப்பாண வலய பதில் கல்விப் பணிப்பாளராக இருந்த இலங்கை. நிர்வாக சேவையை சேர்ந்த அதிகாரி வலிகாமம் வலயக் கல்விப்ப பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எனவே குறித்த அதிகாரியை யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளராக தொடர்ந்து நிரந்தாமாக நியமிக்க ஏன் கல்வி அமைச்சின் செயலாளரால் சிபாரிசு செய்யப்படடவில்லை என்பதும் அவதானிக்கதக்கது.

எனவே கல்வி அமைச்சின் செயலாளர் சிபாரிசானது தனது விருப்பதெரிவேயன்றி உரிய நடைமுறைகளை பின்பற்றி மேற்கொள்ளப்பட்ட ஒன்றல்ல என்பது ஆணைக்குழுவின் அவதானிப்பாகும்.

இவ்விசரணை அறிக்கையினை வடமாகாண ஆளுநருக்கு முன்னிலைப்படுத்துவதுடன் மேற்படி எமது அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பில் தங்களால் எடுக்கப்படும நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்வரும் 15.07.2025 ற்கு முன் அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கவும்.

இவ்விடயமானது 1996 ஆம் ஆண்டின் 21 இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் தேவைப்படுத்தப்படுகின்றது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் எழுத்து மூலம் கடிதம் அனுப்பியுள்ளது.



# வாய்பேச முடியாத இளம் பெண் மீது பலாத்கார செயற்சி

## சந்தேக நபருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்று விடுத்த உத்தரவு!

வாய்பேச முடியாத இளம் பெண் ஒருவரை நள்ளிரவு வேளை வீடு புகுந்து பலாத்காரம் செய்ய முற்பட்ட குற்றச்சாட்டில் ஊர்காவற்றுற்றை பொலிசாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அல்லைப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய வாய்பேச முடியாத பாதிக்கப்பட்ட பெண் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த நபர் 14ம் திகதி புதன்கிழமை இரவு 11.30 மணியளவில் அல்லைப்பிட்டி கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிசார் தெரிவித்தனர்.

முன்பதாக கடந்தசெப்டம்பர் மாதம் 27 ஆம் திகதியன்று நள்ளிரவு குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதையடுத்து குறித்த பெண்ணின் உறவினரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

பொலிசாரின் நடவடிக்கைக்குள் சிக்காமல் குறித்த சந்தேகநபர் தலைமறைவாக இருந்த நிலையில் 14ம் திகதி அன்றையதினம் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய அதிகாரியான ஹரிதாஸ் தலைமையிலான அணியினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் எடுக்கப்பட்ட துரித நடவடிக்கையின் அடிப்படையில் கடந்த 14ம் திகதி இரவு குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டு 15-102025 அன்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் பொலிசாரால் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இநிநிலையில் குறித்த நபரை எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# இலங்கை கடற்பரப்பில் அரக்கத்தனமான படகுகளுடன் நுழையாதீர்கள் – நுழைந்தால் கைது செய்ய நாங்கள் முழு ஆதரவு




## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்ட தலைவர் அன்ரனி சங்கர் எச்சரிக்கை

- எஸ்.ஆர்.லெம்பேட் (12-10-2025)

நாட்டின் சட்டதிட்டங்களை மீறி தொடர்ந்தும் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுகின்ற இந்திய மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கைக்கு தாங்கள் ஆதரவை வழங்குவதாகவும், இந்திய மீனவர்கள் மனித நேயத்துடன் செயல் பட வேண்டும் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்ட தலைவர் அன்ரனி சங்கர் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் 12ம் திகதி அன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த நிலையில் 47 இந்திய மீனவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். குறித்த கைதுக்கு எதிராக இந்தியாவில் பாரிய அளவில் போராட்டங்களை முன்னெடுக்க தயாராகி வருகின்றனர்.

இன்று மட்டுமல்ல இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து எமது மீனவர்களின் பெறுமதியான மீன்பிடி வலைகளை நாசம் செய்து கொண்டிருக்கின்றீர்கள்.

ஒவ்வொரு நாட்டிற்கும் இறையாண்மை இருக்கிறது. குறித்த இறையான்மையை யார் மீறு கிறார்களோ அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். இலங்கை இந்திய மீனவர்களுக்கிடையல் பல்வேறு பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றது. பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட முடிவுகளை இந்திய மீனவ சங்கங்கள் அல்லது மீனவ அமைப்புகள் கடைபிடிக்கவில்லை.

அதற்கு எதிர்மாறாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்று வரை எமது இலங்கை எல்லைக்குள் அத்துமீறி நுழைகின்ற நிலையில் கடற்படையினரால் கைது செய்யப்படுகிறார்கள். ஆனால் இந்திய எல்லைக்குள் வைத்தே அவர்கள் இலங்கை கடற்படை கைது செய்வதாக குற்றம் சுமத்துகிறார்கள்.

தயவு செய்து அரக்கத்தனமாக படகுகளுடன் எங்கள் கடல் எல்லைக்குள் நுழையாதீர்கள். நாங்களும் இந்த கடலை நம்பி இருக்கிறோம். எங்களையும் வாழ விடுங்கள். கோடிக்கணக்கான பெறுமதியான கடல் வழங்களையும், மீன்பிடி உபகரணங்களையும் இழந்து கொண்டிருக்கிறோம்.

உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தற்போது தான் நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி வருகிறோம். எமது வாழ்வாதாரத்தையும் முன்னோக்கி கொண்டு செல்கிறோம். கடற்றொழில் அமைச்சர் கூறியது போல் தயவு செய்து இலங்கை கடற்பரப்பில் வராதீர்கள்.

இலங்கை கடற்பரப்பில் நுழைந்தால் உங்களை கைது செய்வதில் எவ்வித மாற்றமும் இல்லை. அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்களை கைது செய்து சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள கடற்றொழில் அமைச்சருக்கும், இலங்கை கடற் படைக்கும் நாங்கள் பூரண ஆதரவை வழங்குவோம்.

உங்களின் கைது,பாதிப்பு எங்களுக்கு கவலையை ஏற்படுத்துகின்றது. அதனை நாங்கள் உணர்கிறோம். எனவே இனி இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாமல் இருக்க நீங்கள் நடந்து கொள்ள வேண்டும்.

மேலும் மன்னாரில் கடல் உணவு ஏற்றுமதி தொடர்பாகவும் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்தும் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் என்.எம். ஆலம் கருத்து தெரிவித்தார். நீல நிற கால் நீச்சல் நண்டு கடந்த காலங்களில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி பொருளாக அமைந்திருந்தது.

குறித்த தொழில் முறை புத்தளம், கல்பிட்டி தொடக்கம் மன்னார், பூநகரி, யாழ்ப்பாணம் வரையிலான மீனவர்களின் முக்கிய தொழிலாக நீல நிற கால் நீச்சல் நண்டு தொழில் காணப்பட்டது.

குறித்த நண்டு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. தற்போது அமெரிக்கா குறித்த நண்டு கொள் முதலை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

அதற்கான காரணம் இலங்கையில் இருந்து தாங்கள் கோரிய ஆவணம் அல்லது மீன்பிடி தொடர்பான தகவல்களை உரிய தரப்பினர் வழங்காததால் எதிர்வரும் நவம்பர் மாதத்துடன் ஏற்றுமதிக்கான திட்டத்தை அமெரிக்கா அறிவித்துள்ளது. எதிர் காலத்தில் ஐரோப்பிய நாடுகளும் கையாளப் போகுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. என அவர் மேலும் தெரிவித்தார்.



# மன்னார்-நகரசபை மற்றும் மாவட்ட செயலகத்தின் தீர்மானத்திற்கு எதிராக போராட தயாராகும் சாந்திபுரம் கிராம மக்கள்

(15-10-2025)

மன்னார் நகரசபை பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவுகளை கொட்டுவது தொடர்பில் தொடர்ச்சியாக மன்னார் நகரசபை மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் கழிவகற்றல் வாகனங்கள் கழிவுகளுடன் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் மன்னார் தள்ளாடி பகுதியில் மக்கள் வசிக்காத இடத்தில் கழிவுகளை கொட்டுவதற்கு அனுமதி கோரப்பட்ட நிலையில் அந்த இடத்தில் அனுமதி வழங்காது தற்போது மன்னார் சாந்திபுரம், சௌத்பார், தரவான்கோட்டை பகுதியின் மத்தியில் அமைந்துள்ள தனியாருக்கு சொந்தமான ஒரு காணியில் ஐந்து வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் குப்பைகளை கொட்டுவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் குறித்த குப்பைகளை தமது கிராமத்துக்குள் ஒருபோதும் அனுமதிக்க போவதில்லை என சாந்திபுர மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக முன்னதாகவே சாந்திபுரம் பகுதியில் நகர சபைக்கு சொந்தமான காணியில் நகரசபையினால் குப்பைகள் கொட்டப்பட்ட நிலையில் மக்கள் ஒன்று திரண்டு வீதிகளை மறித்து போராட்டம் மேற்கொண்ட நிலையில் குறித்த செயல்பாடு நகரசபையால் நிறுத்தி வைக்கப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் மீண்டும் நகர சபைக்கு சொந்தமான காணிக்கு அருகில் உள்ள தனியார் காணி ஒன்றில் குப்பைகளை கொட்டுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மழை காலம் என்பதாலும் குறித்த குப்பைகளை கொட்டும் பகுதிக்கு அருகில் உள்ள கிராமங்கள் அடிக்கடி வெள்ள பாதிப்புக்கு உள்ளாகும் என்ற அடிப் படையிலும் இதனால் தொற்று நோய்களும் ஏற்படும் ஆபத்து காணப்படுவதால் இந்த தீர்மானத்தை உடனடியாக நிறுத்துமாறு சாந்திபுரம் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு இல்லாமல் மக்கள் விருப்பத்துக்கு மாறாக குப்பைகளை கொட்டினால் மக்களை திரட்டி போராட்டத்தில் ஈடுபடுவோம் என அப்பகுதி மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதே நேரம் தமது கோரிக்கை மற்றும் ஆதங்கங்கள் அடங்கிய மகஜர் மன்னார் நகர சபையிடமும் ஒப்படைத்துள்ளனர்.

# மன்னார் – தலைமன்னார் பிரதான வீதியில் பற்றி எறியும் குப்பை மேடு – மக்கள் பாதிப்பு

## சுகாதார பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் மக்கள்



- எஸ்.ஆர்.லெம்பேட் (15-10-2025)

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி,மன்னார் பொது மயானத்திற்கு பின் பகுதியில் மன்னார் நகர சபையினால் கொட்டப்பட்டு குவிக்கப்பட்ட கழிவு பொருட்களில் ஏற்பட்ட தீ பரவல் 15ம் திகதி அன்று புதன்கிழமை மூன்றாவது நாளாகவும் தொடர்வதால் அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் 15ம் திகதி அன்றைய தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்ற கூட்டத்திற்கு வருகை தந்த பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையிலான குழு அன்று மாலை 6 மணியளவில் குறித்த பகுதிக்கு விஜயம் செய்து பார்வையிட்டது.

இதன் போது குறித்த பகுதி பாரிய புகை மண்டலமாக காட்சி அளித்தது. மேலும் மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியூடாக வாகன போக்குவரத்து பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் முன்னெடுக்கப் பட்டதோடு,சுவாசிக்க முடியாத வகையில் புகை மண்டலம் காணப்பட்டமையால் பல மணி நேரம் குறித்த வீதியூடாக மக்கள் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் காலையும் அப்பகுதியில் பாரிய புகை பரவல் காணப்பட்டமையால் மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள முன்பள்ளி பாடசாலைக்கு மாணவர்கள் செல்லவில்லை எனவும் தெரியவருகின்றது.

மேலும் பொது மயானத்திற்கு பின் பகுதியில் பல குடும்பங்கள் வசித்து வருகின்ற போதும், அங்கே வசிக்கின்ற பெண்கள், ஆண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணி தாய் மார் என அணைவரும், சுவாச பாதிப்பிற்கு உள்ளாகி வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவுடன், பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெகதீஸ்வரன், காதர் மஸ்தான், மன்னார் நகர சபை தவிசாளர், உறுப்பினர்கள், அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் ஆகியோரும் வருகை தந்து நிலமை யை நேரடியாக அவதானித்தனர்.

இதன் போது குறித்த பகுதியில் வசிக்கும் மக்கள் வருகை தந்து தாம் இதனால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தெரியப் படுத்தியதோடு, மக்களின் சுகாதாரத்திற்கு தீங்கு ஏற்படுத்தும் குறித்த நடவடிக்கையான இப்பகுதியில் குப்பை கொட்டுவதை நிறுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

தாங்கள் ஒவ்வொரு முறையும் இவ்வாறான பாதிப்பை எதிர் நோக்குவதாகவும், அதிகாரிகளும், அரசியல் வாதிகளும் தங்களுக்கு ஏமாற்று வாக்குறுதிகளை தந்து விட்டு செல்வதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்தனர்.

இதற்கு பதில் வழங்கிய பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க குறித்த பிரச்சினைக்கு வெகு விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும்,மக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

எனினும் மக்கள் தமது எதிர்ப்பை தெரிவித்த தோடு,தாங்கள் தொடர்ந்தும் பல்வேறு சுகாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் போராட்டம் நடக்கையில் பின் கதவால் வெளியேறிய வடமாகாண ஆளுநர்

## கடுமையான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என தொழிற்சங்கம் எச்சரிக்கை!

பு. கஜிந்தன்

வட மாகாண கல்வி திணைக்களத்தினால் சேவையின் தேவை கருதி என மேற்கொள்ளப்பட்ட ஆசிரிய இடமாற்றம் பாரபட்சமானதும் பழிவாங்கல் நோக்கமாகவும் கருதும் நிலையில் குறித்த இடமாற்றத்தை உடன் இடைநிறுத்தி மீள மேற்கொள்ள வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மூன்றாவது நாளாக 15ம் திகதி புதன்கிழமை அன்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தவகையில் அன்றையதினம் மதியம் ஆளுநர் செயலகத்தை முடக்கி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே முரண்பாடு ஏற்பட்டது.

பின்னர் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பணிப்பாளர் ஜெயச்சந்திரன், வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து கல்வி வலயங்களின் பணிப்பாளர்கள் என அனைவரும் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு அழைக்கப்பட்டு கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

பின்னர் அதிகாரிகள் அனைவரும் கலந்துரையாடல் முடிந்து வெளியேறினர். இறுதியாக வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் வெளியேறியபோது போராட்டக்காரர்கள் அவரை வழிமறித்தபோது, ஆளுநர் செயலகம் உத்தியோகபூர்வ அறிவிப்பு வழங்கும் என்று போராட்டக் காரர்களுக்கு கூறிவிட்டு சென்றார்.



பின்னர் ஆளுநர் செயலகத்தில் அதிகாரிகள் எவரும் இல்லை என்றும், தாங்கள் உள்ளே சென்று பார்க்க வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் ஆளுநர் செயலகத்துக்குள் செல்ல முயற்சித்தவேளை பொலிஸார் அவர்களை வழிமறித்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் ஆளுநரின் செயலாளர், ஜோசப் ஸ்டாலின் உட்பட சிலரை அழைத்து கலந்துரையாடினார். இந்நிலையில் இடம்பெற்ற இடமாற்றத்தின் அடிப்படையில் செயற்படுங்கள் என ஆளுநரின் செயலாளர் கூறியதாக ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். அத்துடன் நாடளாவிய ரீதியாக இதற்கு எதிர்ப்பு வெளியிடப்படும் எனவும் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

பின்னர் ஆளுநர் பின் பக்கத்தால் ஆளுநர் செயலகத்தில் இருந்து வெளியேறினார்.

# மக்களுக்கு தொடர் தொல்லையாக இருக்கும் கட்டாக்காலிகளுக்கு நடவடிக்கை வேண்டும் என வேலணை பிரதேச சபை உறுப்பினர் வலியுறுத்து!




பெரும்போக செய்கைக்கு மட்டுமல்லாது மக்களுக்கு நாளாந்தம் பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்திவரும் வேலணை பிரதேச ஆளுகைக்குட்பட்ட தெருவோரங்களிலும் குடியிருப்பு பகுதிகளுக்குள்ளும் கட்டாக்காலியாக திரியும் விலங்குகளை கட்டுப்படுத்துவதற்கான வலுவான பொறிமுறையை நடைமுறைப்படுத்துவது அவசியம் என வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் அனுசியா ஜெயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

வேலணை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு 15ம் திகதி அன்றையதினம் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பிரதேசத்தின் பல்வேறு விடையங்கள் குறித்து சபையில் பிரஸ்தாபிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு அவற்றுள் பல நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் கட்டாக்காலி விலங்குகளை கட்டுப்படுத்தும் முன்மொழிவை சபையில் சமர்ப்பித்து கருத்துக் கூறுகையில் இவ்வாறு கூறிய அவர் மேலும் கூறுகையில், தற்போது பருவகால மழையுடன், பெரும்போக விவசாய நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ள நிலையில் கட்டாக்கலிகளை கடுப்படுத்தும் செயற்பாடுகளை ஒவ்வொரு பிரதேச சபைகளும் சட்ட ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளன.

அதன் அடிப்படையில் எமது சபையும் குறித்த நடவடிக்கையை முன்னெடுத்து கட்டாக்காலிகளால் ஏற்படும் பாதிப்புக்களை கட்டுப்படுத்துவது அவசியம்.

இதேநேரம் கால்நடை வரையறைக்குள் கறவை மாடுகளை சுயதொழில் முயற்சியாக பலர் குறிப்பாக பெண்களை தலைமையாக கொண்ட குடும்பங்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

அதுமடுமல்லாது எவரது பராமரிப்பும் இன்றி திரியும் மாடுகள் உள்ளிட்ட உயிரினங்களும் அதிகளவில் தமது உணவு மற்றும் ஒதுங்கி நிற்கும் தேவைக்காக பரவலாக திரிகின்றன.

இவ்வாறான நிலையில் அனைவரது ஒத்துளைப்பும் இன்றி இந்த கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துவதென்பதும் சவாலான விடையம்.

இவ்வாறு இந்தக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதனூடாக விவசாயப் பயிர்கள், விபத்துகளைக் குறைத்தல், பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாத்தல், போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்தல் ஆகியவற்றுடன் விலங்குகளின் நலனையும் உறுதி செய்ய முடியும்.

இதேவேளை நகர் மற்றும் வீதிகளில் குப்பைகள் மற்றும் கழிவுகளைச் சரியாக அப்புறப்படுத்துவதன் மூலம், உணவு தேடி கால்நடைகள் வீதிகளுக்கு வருவதைக் குறைக்க முடியும் என நம்புகின்றேன்.

எனவே குறித்த விடையத்தை தேவையின் அவசியம் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

குறித்த முன்மொழிவு சபையில் விவாதத்துக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் சபை உறுப்பினர்களான, கருணாகரன் நாவலன், சுவாமினாதன் பிரகலாதன், கனகையா செல்லப்பா பார்த்தீபன், பொன்னம்பலம் நடனசிகாமணி, சிவகடாச்சன் செந்தூரன், ஆனந்தராசா சதீஸ்குமார், ஞானப்பிரகாசம் ஞானரூபன், லோகேந்திரன் இதயதீபன், செல்வக்குமார் திருக்கேதீஸ்வரன், ஆகியோர் தமது வாதங்களை முன்வைத்து கூறும்போது - கால்நடைகளை அவிழ்த்து விடுவதால் ஏற்படும் அபாயங்கள், விபத்துக்கள் மற்றும் அதன் விளைவுகள் அதிகமானது.

இது குறித்து அவற்றின் உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமாகும்.

அத்துடன் இந்த பிரச்சினையை நேரடியாகத் தீர்க்க உள்ளூர் நிர்வாக அமைப்புகளுடன் பொதுமக்களுக்கும் முக்கிய பங்கு இருக்கின்றது.

இதேநேரம் வளர்ப்பு மாடுகளை உரிமையாளர்கள் கட்டி வளர்ப்பது அவசியமாகும்.

அதனடிப்படையில் பொது இடங்களில் அலைந்து திரியும் கட்டாக்காலிகள் மற்றும் பிற விலங்குகளைப் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதுமட்டுமன்றி கட்டாக்காலி நாய்களின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த, கருத்தடை செய்யும் திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும்.

அத்துடன் சபையின் அறிவுறுத்தல்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் விழிப்புணர்வுகளை, மீறிச் செயற்படும் நபர்களது கால்நடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்படமை குறிப்பிடத்தக்கது.

# இவ்வாண்டு காங்கேசன்துறை – நாகபட்டினம் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இடைநிறுத்தப்படாது என இலங்கைக்கான பொறுப்பாளர் தெரிவிப்பு!

பருவப் பெயர்ச்சி மழை காரணமாக கடந்த ஆண்டு இடைநிறுத்தப்பட்டது போல இந்த ஆண்டு காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இடைநிறுத்தப்படாது என அந்தக் கப்பல் நிறுவத்தின் இலங்கைக்கான பொறுப்பாளர் கே.எம்.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

15ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கப்பல் சேவையானது கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் ஒரு வருடத்தை பூர்த்தி செய்துள்ளது. இந்நிலையில் இரண்டாவது ஆண்டில் கப்பல் சேவை காலடி எடுத்து வைத்துள்ளது.

கடந்த ஆண்டு பருவப் பெயர்ச்சி மழை காரணமாக நவம்பர் 2ஆம் திகதியில் இருந்து ஜனவரி இரண்டாம் வாரம் வரை எமது சேவைகளை நாங்கள் இடைநிறுத்தியிருந்தோம். இம்முறை நாங்கள் அவ்வாறு எந்தவிதமான இடைநிறுத்தலையும் மேற்கொள்ள மாட்டோம். காலநிலை சீராக இல்லாமல் விட்டால் மாத்திரம் கப்பல் போக்குவரத்தை நிறுத்திவிட்டு மீண்டும் காலநிலை சீராகியதும் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்போம்.

தீபாவளியை முன்னிட்டு தற்போது எமது கப்பல் சேவை தினசரி இடம்பெற்று வருகின்றது. ஒக்ரோபர் 28 வரை தினமும் போக்குவரத்து சேவை இடம்பெறும். தீபாவளி தினத்தன்று மாத்திரம் சேவை இடம்பெறாது.

ஒக்ரோபர் 29ஆம் திகதியில் இருந்து இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு, கப்பல் திருத்த பணிகளுக்காக எமது கப்பல் சேவையை தற்காலிகமாக இடைநிறுத்தவுள்ளோம். பின்னர் நவம்பர் மூன்றாவது அல்லது நான்காவது வாரத்தில் இருந்து மீண்டும் கப்பல் போக்குவரத்து சேவையை ஆரம்பிப்போம்.



தற்போது நாங்கள் இருவழி பயணத்திற்கு 28 ஆயிரத்து முந்நூறு ரூபாவை அறவிடுகின்றோம். இலங்கையில் இருந்து செல்வதற்கு 12 ஆயிரத்து முந்நூறு ரூபாவும், இந்தியாவில் இருந்து வருவதற்கு 16 ஆயிரம் ரூபாவும் அறவிடுகின்றோம்.

தைப்பொங்கலை முன்னிட்டு சிறப்பு சலுகைகளையும் நாங்கள் வழங்கவுள்ளோம். மேலும் தற்போது மேற்குறித்த கட்டணத்துடன் 23 கிலோ எடையுடைய பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கின்றோம். அதைவிட 25 கிலோ மேலதிகமாக எடுத்து வருவதற்கு மேலதிக இலங்கை பணத்தில் 8 ஆயிரத்து ஐநூறு ரூபாவை அறவிடுகின்றோம். அதற்கும் அதிகமாக கொண்டுவர விரும்பினால் பொதி கட்டணம் சற்று அதிகமாக காணப்படும்.

நாங்கள் நமது கப்பலில் தீர்வை அற்ற கடைத் தொகுதி ஒன்றை கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் ஆரம்பித்துள்ளோம். எனவே நீங்கள் அதிலும் உங்களுக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்யலாம் என்றார்.

கனடிய செய்திகள் Canadian News

# Carnatic Vocal Arangetram of Miss Mithula Kanagasabai in Montreal, presented by Mathuragana Mandram

## சிறப்பாக நடைபெற்ற மொன்றியால் "மதுரகான மன்ற" மாணவி செல்வி மிதுலா கனகசபையின் சங்கீத அரங்கேற்றம்



நீண்டகாலமாக மொன்றியால் மாநகரில் இயங்கிவரும் மதுரகான மன்றத்தின் மாணவியும் அதன் நிறுவனர் செல்வமலர் மதுரநாயகம் மற்றும் சங்கீத ஆசிரியை செல்வி நயனி மதுரநாயகம் ஆகியோரின் மாணவியுமான செல்வி மிதுலா கனகசபையின் சங்கீத அரங்கேற்றம் கடந்த 11ம் திகதி சனிக்கிழமை யன்று மொன்றியால் மாநகரில் உள்ள Theatre Beaubois அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

இசை அரங்கேற்றத்திற்கு பக்கவாத்தியக் கலைஞர்களாக மிருதங்க இசைவாருதி வாசுதேவன் இராஜலிங்கம் - மிருதங்கம், மிதுரன் மனோகரன் - வயலின். திருவரங்கன் தபோதரன் - கடம். மோகனன் ரவீந்திரன் - மோர்சிங். செல்வி அசீரா தாமோதரம்பிள்ளை ஆகியோர் தங்களை அர்ப்பணித்தும் தங்கள் அனுபவத்தை அந்த மேடையில் சமர்ப்பித்தும் மிதுலா அவர்களின் அரஙகேற்றத்தை தூக்கி நிமிர்த்தினார்கள் என்றால் அது மிகையாகாது.

மேற்படி சங்கீத அரங்கேற்றத்திற்கு பிரதம விருந்தினராக கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் எழுத்தாளருமான லோகன் லோகேந்திரலிங்கம் அவர்களும் சிறப்பு விருந்தினராக, சங்கீத ஆசிரியை திருமதி. சியாமளா சாந்தபவான் ஆகியோர் ரொறன்றோவிலிருந்து அழைக்கப்பட்டிருந்தனர்.

பிரதம விருந்தினர் லோகேந்திரலிங்கம் அவர்கள் தனது உரையில் "கர்நாடக சங்கீதத்தை கற்றுக் கொண்டவர்கள் மற்றும் அதனை மாணவ மாணவிகளுக்கு கற்பிப்பவர்கள் என இசைத்துறை சார்ந்தவர்கள் ஒரு பக்கம் இருக்க ரசிகர்களான மற்றவர்களும் தங்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த சிறந்த கர்நாடக இசை ரசிகர்களாக மாறவேண்டும். அதற்காக அவர்கள் கர்நாடக இசையின் அடிப்படைகளை குறைந்தளவாவது தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் மிதுலா கன-கசபை போன்ற இசைச் செல்விகளின் எதிர்கால இசையுலகம் பிரகாசம் உள்ளதாக இருக்கும். மிதுலா போன்றவர்களுக்கும் அவரது குரு நயனி மற்றும் குருவின் குரு ஆசிரியை செல்வலர் ஆகியோர்க்கும் உற்சாகம் தருவதாக இருக்கும். அத்துடன் கர்நாடக இசையின் உள்ளே அடங்கியிருக்கும் தெய்வீகம்- தமிழ் மொழியின் வளம் மற்றும் எமது தமிழ் இனத்தின் பண்பாடு ஆகியவற்றைக் காத்திட நாம் கர்நாடக இசையின் பெருமைகளை உணர்ந்து அதன் ரசிகர்களாக மாறவேண்டும்" என்றார்.










சிறப்பு விருந்தினர் ஶ்ரீமதி சியாமளா சாந்தபவான் தனது உரையில் அன்றைய இசைச் செல்வி மற்றும் அரங்கேற்ற நாயதி மிதுலாவின் திறமை. பக்குவம் மற்றும் அவரது அவரது குரு நயனி மதுரநாயகம் மற்றும் குருவின் குரு ஆசிரியை செல்வலர் மதுரநாயகம் ஆகியோரின் கற்பித்தல் திறனையும் பாராட்டினார்.

இறுதியில் பிரதம விருந்தினர் மற்றும் பக்கவாத்தியக் கலைஞர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் ஆகியோரை மிதுலா அவர்களின் பெற்றோர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் இணைந்து பாராட்டினர்.

வயதில் இளையவராக இருந்தாலும் தான் கற்ற கர்நாடக இசையையும் அதன் கட்டுக்கோப்புக்களையும் உணர்ந்தும் கீழ்ப்படிந்தும் மேடையில் தனது இசைப் பங்களிப்பை வழங்கிய மிதுலா கனகசபை என்னும் இசைச் செல்வியை அனைவரும் பாராட்டிச் சென்றனர்.

**- சத்தியன்**



# Mississauga Trillium Hospital receives a largest donation of 100,000 dollars from Saravanaa Bavan Vegetarian Restaurants Group

## மிசிசாகாவில் மருத்துவச் சேவையாற்றும் Trillium Hospital - Trillium Health Foundation வைத்தியசாலைக்கு $100,000 நன்கொடை வழங்கிய சரவணபவான் சைவ உணவக நிறுவனம்

கனடா வாழ் தமிழ் பேசும் வர்த்தகப் பிரமுகரும் மக்களின் தேவைகளை அறிந்து பரோபகார உதவிகளை வழங்குபவருமான கணேசன் சுகுமார் அவர்களை தலைவராகக் கொண்டு இயங்கும் Sugshe Group of Companies குழுமத்தின் கீழ் இயங்கும் சரவணா பவன் சைவ உணவக நிறுவனமானது நமது சமூகத்திற்குள் சுகாதாரம் மருத்துவம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான அதன் உன்னத நோக்கங்களுக்கு ஆதரவு வழங்கும் நீண்ட கால திட்டத்தின்படி மிசிசாகா நகரில் அமைந்துள்ள Mississauga Trillium Hospital Ontario Trillium Foundation Trillium Health வைத்தியசாலைக்கு $100,000 நன்கொடை அளித்துள்ளது என்ற செய்தியை இங்கு பகிர்ந்து கொள்வதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்த பங்களிப்பை மேற்படி வைத்தியசாலையின் சார்பாக மூத்த துணைத் தலைவர் திருமதி. நிக்கோல் லாமண்ட் மற்றும் தொண்டு நிறுவனத்தின் மேம்பாட்டு அதிகாரி திருமதி. டூபா நாசிர் ஆகியோர் அன்புடனும் மகிழ்ச்சியுடனும் திரு. கணேசன் சுகுமார் அவர்களிடமிருந்து அண்மையில் பெற்றுக்கொண்டனர்.

இந்த நிதி அன்பளிப்பு தொடர்பாக திரு. கணேசன் சுகுமார் அவர்கள் நண்பர்களிடம் உரையாடுகையில் "இந்த முயற்சி எனது பயணம் முழுவதும் என்னை ஊக்கப்படுத்தியும் ஆதரித்தும் வரும் சமூகத்திற்குத் திருப்பித் கொடுப்பதற்கான எனது வாழ்நாள் உறுதிப்பாட்டின் மற்றொரு முக்கியமான மைல்கல்லைக் குறிக்கிறது. இந்த நிதி அன்பளிப்புக்களை வைத்தியசாலைகளுக்கு வழங்கும் வரிசையில், ஸ்கார்பரோ கிரேஸ் வைத்தியசாலை மற்றும் பொது வைத்தியசாலைகளுக்கு $500,000 நன்கொடை அளித்ததைத் தொடர்ந்து, கனடா முழுவதும் சுகாதார அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் சமூக நல்வாழ்வை மேம்படுத்துதல் என்ற எனது தொலைநோக்கை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

எமது Sugshe Group of Companies குழுமத்தில் பணியாற்றும் நாங்கள் அனைவரும் ஆழமான நம்பிக்கையைக் கொண்டுள்ளோம் - உண்மையான வெற்றி என்பது நாம் நமக்காக என்ன சாதிக்கிறோம் என்பதன் மூலம் அல்ல, மாறாக மற்றவர்களுக்கு நாம் என்ன பங்களிக்கிறோம் என்பதன் மூலம் அளவிடப்படுகிறது. இந்தத் தொடர்ச்சியான முயற்சிகள் மூலம், தரமான பராமரிப்புக்கான அணுகலை மேம்படுத்துவதிலும், அனைவருக்கும் ஆரோக்கியமானதும், இரக்கமுள்ளதுமான உலகத்தை உருவாக்குவதிலும் ஒரு சிறிய பங்கை வகிக்கின்றோம் என நாம் நம்புகின்றோம்." என்று திரு கணேசன் சுகுமார் தெரிவித்தார்.







இனிய
தீபாவளி
நல்வாழ்த்துகள்
Nick Mantas
Councillor
Ward 22, Scarborough-Agincourt
100 Queen Street West, Suite A1
Toronto, ON M5H 2N2
Phone: (416) 392-1374
Fax: (416) 392-7431
Nick.Mantas@toronto.ca


இனிய தீபாவளி
வாழ்த்துகள்
எங்கும் ஒளி மிளிர, என்றும் நம்பிக்கை
மலர, இந்த தீபாவளியை அனைவரும்
இணைந்து இனிதே கொண்டாடுவோம்.
Visit Us: 7380 McCowan Rd, Unit 3, Markham
Tel: 905 - 305 - 1935 | E-mail: logan,kanapathico@pc.ola.org
Logan Kanapathi LoganKanapathi Logan_Kanapathi logankanapathi

# Dollard-des-Ormeaux D.D.O இற்கான நகர சபைத் தேர்தல்–2025

# RYAN BROWNSTEIN

## District Seven-7



**Dollard-des-Ormeaux D.D.O இற்கான நகர சபைத் தேர்தலில் போட்டியிடும் உங்கள் தோழனும் நண்பருமாகிய என்னை இந்தத் தேர்தலிலும் வாக்களித்து தேர்ந்தெடுங்கள்!**

**கடந்த தேர்தலிலும் என்னையே ஒரு முகமாகத் தெரிவு செய்தமைக்கு நன்றி!**



*Authorized by Ashley Stopek,*
*Official Agent for Ryan Brownstein*

தேர்தல் தினத்தன்று - நவம்பர் மாதம் 2ம் திகதி, 2025 அன்று வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று எனது பெயருக்கு நேரே புள்ளடியிடுங்கள்.

**65, Sunshine, D.D.O** என்னும் விலாசத்தில் உள்ள **Sunshine Academy** பாடசாலை
வாக்களிப்பு நேரம்: காலை 10:00 மணி தொடக்கம் இரவு 8:00 மணி வரை

முன்கூட்டியே வாக்களிக்க விரும்புகின்றவர்கள் **(Advance Voting)**
ஒக்டோபர் 26ம் திகதி, 2025 ஞாயிற்றுக்கிழமை

**2900 Lake Street** என்னும் விலாசத்தில் உள்ள
**Polyvalente Des Sources High School** பாடசாலை
வாக்களிப்பு நேரம்: மதியம் 12:00 மணி தொடக்கம் இரவு 8:00 மணி வரை



## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Raiaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24









## Salma Zahid

**MP for Scarborough Centre**

5-2155 Lawrence Avenue East
Scarborough, ON M1R 5G9
Tel: (416) 752-2358
Email: salma.zahid@parl.gc.ca
SalmaZahid15
@SalmaZahid15




Happy
Diwali
தீபாவளி
வாழ்த்துக்கள்
Hon.
TIM HODGSON
Member of Parliament
Markham-Thornhill
Tim.Hodgson@parl.gc.ca
(905) 479-1269
@TimHodgson.MT
@timhodgson.mt
www.timhodgsonMP.ca

# Buy Canadian should fund Canadian jobs and news, not U.S. Big Tech

## A Message from Canada's news publishers

To the Government of Canada,

Canada's sovereignty and economy is under threat from abroad. More than ever, Canadians must be free to decide our own country's future.

A strong, plural and free news media is an essential ingredient to our democracy: a healthy industry that serves and is beholden to Canadians, not foreign tech giants.

Our Canadian publications have always stood for a strong and independent Canada.

We applaud the Government of Canada's ambition to build Canada strong, and commitment in the forthcoming Budget to Buy Canadian.

Last year, our federal government including agencies and Crown corporations spent over $100 million on advertising. Most of it went to U.S. Big Tech.[1]

Why are we funding American tech monopolies that extract tens of billions a year out of Canada -- largely untaxed -- at the expense of local journalism and culture, and whose platforms have become vectors for division and disinformation?

Unlike them, we are accountable to Canadians and legally liable for what we publish. Our professional journalists chase the truth, not algorithms. We produce reliable, trustworthy information, not clickbait and AI slop.

**Let's reinvest our ad dollars in Canada. In Budget 2025, the Government of Canada should follow Ontario's lead and set aside a minimum of 25% of its advertising budgets for Canadian news media.**

At no additional cost to taxpayers, the government can support local jobs while getting its message out in a brand safe environment. Far fewer Canadians trust ads on Facebook and Instagram than those published by Canadian news media.[2]

Buying Canadian advertising in Canadian news media is both the right and smart thing to do.

Respectfully,

Canada's news publishers

News Media Canada

Community NewsMedia Association British Columbia & Yukon

Saskatchewan Weekly Newspapers Association swna

Canada's Other Voices National Ethnic Press and Media Council of Canada

Alberta Weekly Newspapers Association

mcna Manitoba Community Newspapers Association

hebdos QUÉBEC

ocna Ontario Community Newspapers Association

SOURCES

[1] Annual Report on Government of Canada Advertising Activities 2023-2024, combined with proprietary industry data.

[2] Totum Research Canada, January 2025. Canadians 18+, n=2418.; Pollara for the Dais. 2025 Survey of Online Harms, Canadians 16+, n=2502.

# நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் — கனடா நடாத்திய "மாவிலி வசந்தம் 2025" கலைவிழா சிறப்புக்களுடன் நடைபெற்றது





நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் - கனடா நடாத்திய "மாவிலி வசந்தம் 2025" கலைவிழா நிகழ்வும், நூல் வெளியீடும் Oct 11, 2025 அன்று 22 Esana Park Drive, Markham இல் அமைந்துள்ள Peoples Theatre for the Performing Arts உள்ளக கலையரங்கில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் தமிழரின் பாரம்பரியக் கலைகள் பல மேடையேறி நிகழ்வை மெருகூட்டியது பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்திருந்தது.

கடந்த 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெற்ற மாவிலி வசந்தம் விழாவிற்கு பெருமளவு மக்கள் கலந்து சிறப்பித்தார்கள். இங்கே காணப்படும் படங்கள் அங்கே எடுக்கப்பெற்றதாகும். மேற்படி நிகழ்வில் ஸ்காபுறோவில் அமையவுள்ள தமிழர் சமூக மையத்தின் கட்டட நிதிக்காக ஒன்றிய அங்கத்தவர்கள் சார்பில் 10000 டாலர்கள் வழங்கப்பெற்றன என்பது பாராட்டுக்குரியது.

















# மன்னார் தாழ்வுபாடு கடலில் மீனவர்களின் வலைகளில் சிக்சி பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு வகை சிவப்பு நண்டு

## மீனவர்களின் வலை தொகுதிகள் சேதம்

(15-10-2025)



மன்னார் மாவட்டம் தாழ்வுபாடு கிராம மீனவர்கள் தமது கடற்பரப்பில் காணப்படும் சிவப்பு நண்டு என அழைக்கபடுகின்ற ஒரு வகையான நண்டின் தாக்கம் காரணமாக குறித்த மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மன்னார் தீவுப்பகுதி கடற்றொழில் சார் கிராமங்களை கொண்ட பகுதியாகும்.இவற்றில் தாழ்வுபாடு கிரா மமும் ஒன்றாகும்.

குறித்த கிராமத்தில் கடந்த பல நாட்களாக "சிவப்பு நண்டு" என அழைக்கபடுகின்ற ஒரு வகையான நண்டினால் மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நண்டுகள் மீனவர்களின் வலைகளில் பாரியளவில் சிக்குவதால் மீனவர்களின் வலை தொகுதிகள் சேதமடைந்துள்ளது.


குறித்த நண்டை எந்த ஒரு தேவைக்கும் பயன்படுத்த முடியாது என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இப் பகுதி மீனவர்கள் கடந்த 15 வருடங்களுக்கு முன் குறித்த சிவப்பு நண்டினால் ஒரு தடவை இப்பகுதியில் பாரிய சேதத்தை ஏற்படுத்தி இருந்ததாகவும் அதன் பிற்பாடு இந்த ஆண்டு இவ்வாறு வருகை தருவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் மீனவர்களின் வலைகளில் சிக்கும் குறித்த நண்டுகளை வலையில் இருந்து பிரித்து எடுக்க முடியாத நிலை காணப்படுவதோடு, இதனால் வலைகள் பாதிக்கப்படுவதோடு, தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக அப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**



**இணையத்தளம்: www.tamilthakaval.org**

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடைய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்ககூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# Federation of Global Tamils, successfully hosted a 3 day International Research Conference in Canada

# அனைத்துலக தமிழர் பேரவை கனடா— ஸ்காபுறோவில் நடத்திய 3 நாள் " சர்வதேச ஆராய்ச்சி கருத்தரங்கு" சிறப்பாக இடம்பெற்றது

















கடந்த 10ம் திகதி வெள்ளிக்கிழமை, 11ம் திகதி சனிக்கிழமை மற்றும் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய மூன்று தினங்கள், கனடாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் அனைத்துலக தமிழர் பேரவை கனடா-ஸ்காபுறோவில் நடத்திய 3 நாள் " சர்வதேச ஆராய்ச்சி கருத்தரங்கு" சிறப்பாக இடம்பெற்றது.

முதல் நாள் நிகழ்ச்சிகளில் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினரும் இணை அமைச்சருமான விஜேய் தணிகாசலம் மற்றும் ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் நீதன் சண்முகராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்து ஆற்றிய உரைகள் அங்குரார்ப்பண வைபவத்திற்கு சிகரம் வைத்தது போன்று அமைந்தது. அன்று கலந்து கொண்ட உ ரையாளர்களில் பலர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பதும் அவர்கள் அனைவரும் தங்கள் துறைசார்ந்த விடயங்களை முக்கிய பொருளாக எடுத்து உரையாற்றியமை சபையோரைக் கவர்ந்தவையாக அமைந்தன.

இங்கே காணப்படும் படங்கள் 10ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற அங்குரார்ப்பண வைபவத்தின் போது எடுக்கப்பெற்றவையாகும். அன்றைய நிகழ்ச்சிகளை கென் கிருபா அவர்கள் தொகுத்து வழங்கினார்.



# புதிய ஐநா தீர்மானமும் பின்னும்



”சிறிலங்கா தொடர்பான ஐநா மனிதவுரிமை பேரவையின் 60.⁚.1 தீர்மானம் நீதியைப் பெற்றுத் தராது! தமிழர்கள் தம்மை ஒருங்கிணைத்துக் கொள்வதே முதல் பணி!“ இது ஈழத் தமிழர்கள் வாழ்வுரிமை அமைப்பு வெளியிட்ட அறிக்கையின் தலைப்பாகும்.ஈழப் போராட்டத்திற்கு அதிகம் பங்களிப்பைச் செய்த தமிழகத்தைச் சேர்ந்த ஈழ உணர்வாளர்கள் இணைந்து உருவாக்கிய கட்டமைப்பே ஈழத் தமிழர் வாழ்வுரிமை கூட்ட மைப்பாகும். கடந்த 13ஆம் தேதி அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் குளத்தூர் மணி கையெழுத்திட்டு வெளியிட்டிருக்கும் இந்த அறிக்கையின் ஒரு பகுதி கடைசியாக நிறைவேற்றப்பட்ட ஐநா தீர்மானம் தொடர்பாக பின்வருமாறு கூறுகிறது.

””இந்த தீர்மானம் முந்தைய தீர்மானங்களில் இருந்து ( 30/1 (2015), 46/1 (2021) 51/1 (2022), 57/1 (2024) ) ஒருபடி கீழே இறங்கிவிட்டது. இந்த தீர்மானத்தில் முதல் முறையாக “பன்னாட்டு“ என்ற சொல் அடியோடு நீக்கப்பட்டுள்ளது. இது பன்னாட்டு உதவியுடனான பொறுப்புக்கூறல் பொறிமுறை என்ற பேரவையின் முந்தைய உறுதிப்பாட்டிலிருந்து பின்வாங்கியதைக் குறிப்பதாகும். 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30.⁚.1 தீரமானம் பன்னாட்டு நீதிபதிகள் பங்கேற்புடனான கலப்பு பொறிமுறை ஒன்றை முன்வைத்தது. ஆனால், பத்தாண்டுகள் கழித்து அதே பேரவையில் முந்தைய நிலைப்பாட்டை மறுத்து உள்நாட்டுப் புலனாய்வு என்று பேசுகிறது”

கடந்த 16 ஆண்டு கால ஜெனிவாமைய அல்லது மேற்கு நாடுகளை நோக்கிய ஈழத் தமிழ்த் தேசிய அரசியலின் தற்போதைய நிலை குறித்து தமிழகத்தில் உள்ள ஈழ ஆதரவு செயற்பாட்டாளர்களின் கருத்து அது.

தமிழகத்திலிருந்து வரும் கருத்துக்களுக்கு ஒரே சமயத்தில் இனப்பரிமாணமும் பிராந்தியப் பரிமாணமும் ராஜதந்திரப் பரிமாணமும் உண்டு. ஏனென்றால் இந்தியப் பேரரசின் அரசியல் தீர்மானங்களின் மீது தாக்கம் செலுத்தக்கூடிய ஒரே சாத்திய வெளி தமிழகம்தான். ஈழத்தமிழர்கள் நொதிக்கச் செய்ய வேண்டியது தமிழகத்தைத்தான்.

ஆனால் கடந்த 16 ஆண்டுகளாக தமிழகத்தின் பரந்தளவிலான கவனக் குவிப்புக்குள் ஈழத்தமிழர்கள் இல்லை.ஈழத் தமிழ் விவகாரம் தமிழகத்தில் நொதிப்பை ஏற்படுத்தும் ஒன்றாக இல்லை.செம்மணிப் புதைகுழி திறக்கப்பட்டிருந்த பின்னணிக்குள்,கடந்த ஒகஸ்ற் 19ஆம் திகதி தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் சென்னையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. “ஈழத்தில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு சாட்சியாக விளங்கும் செம்மணி மனிதப் புதைகுழிகளுக்கு நீதி விசாரணை நடத்தக் கோரி ஐநா மன்றத்தை வலியுறுத்தியும், தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஈழத்தில் பொது வாக்கெடுப்பு நடத்த கோரும் தீர்மானத்தை நிறைவேற்றி ஒன்றிய அரசிற்கு அனுப்பி ஒன்றிய அரசை வலியுறுத்தக் கோரியும்” ,அந்தப்பேரணியில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.ஆனால் அந்தப் பேரணியோ அதில் பேசப்பட்ட விடயங்களோ ஈழத் தமிழர்களுடைய பிரதான ஊடகங்களில் பெரிய அளவுக்குக் கவனிப்பைப் பெறவில்லை.

திபெத்தியர்களின் சுதந்திரப் போராட்டத்தில் இதுவரையிலும் நூற்றுக்கும் அதிகமானவர்கள் திபெத்துக்காக தீக்குளித்திருக்கிறார்கள்.இவர்கள் அனைவருமே திபெத்தவர்கள்தான். பிற இனத்தவர்களோ பிற நாட்டவர்களோ கிடையாது. ஆனால் ஈழத் தமிழர்களின் போராட்டத்திற்காக இதுவரை தமிழகத்தில் 19 தியாகிகள் தீக்குளித்திருக்கிறார்கள். இவர்கள் அனைவருமே தமிழகத்தவர்கள்.இவர்களில் யாருமே இந்தியப் பேரரசின் ராஜதந்திர இலக்குகளை முன்வைத்துத் தீக்குளிக்கவில்லை. திருகோணமலையில் உள்ள எண்ணைக் குதங்களைக் கேட்டோ,அல்லது பலாலி விமான நிலையத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டோ, அல்லது காங்கேசன் துறையில் இருந்து நாகபட்டினத்திற்கு பயணிகள் சேவையைத் தொடங்க வேண்டும் என்று கேட்டோ,அல்லது 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டோ அவர்கள் தீக்குளிக்கவில்லை. ஈழத் தமிழர்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டும்நீதி கிடைக்க வேண்டும் என்று கேட்டுத்தான் தீக்குளித்தார்கள்.

உலகிலேயே கடலால் பிரிக்கப்படும் ஒரே இனத்தைச் சேர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் கடலின் மறுபுறத்தில் இருக்கும் மக்களுக்காகத் தீக்குளித்தமை என்பது முன்னெப்பொழுதும் நவீன வரலாற்றில் இடம்பெற்றிராத ஓர் அரசியல் தோற்றப்பாடு. அந்த 19 தியாகிகளுக்காகவும் ஈழத் தமிழர்கள் என்றென்றும் தமிழகத்துக்குத் தலை வணங்க வேண்டும்.

அரசியல்வாதிகள் தங்களுடைய கட்சி அரசியலைத்தான் செய்வார்கள். ஆனால் அந்த 19பேரும் அவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கட்சி மைய அரசியலுக்காகத் தீக்குளிக்கவில்லை.

நடிகர் விஜய் கட்சி தொடங்கிய பின் பிரச்சாரக் கூட்டங்களை படிப்படியாக ஒழுங்குப்படுத்தி வந்த ஒரு பின்னணிக்குள், ஈழத்தமிழர்களைப் பற்றியும் கதைக்க வேண்டி வந்தது. ஈழத் தமிழ் அரசியலை அங்கே கதைக்க வேண்டிய ஒரு தேவை இருப்பதைத்தான் அது காட்டுகின்றது. தமிழகத்தைத் தவிர்த்து விட்டு ஈழத் தமிழர்கள் நீதிக்கான போராட்டத்தில் வேகமாக முன்னேற முடியாது.

நீதிக்கான போராட்டத்தில் இம்முறை ஜெனிவா தீர்மானமானது தமிழ் மக்களின் நோக்கு நிலையில் பின்னடைவுதான்.ஆனால் அந்தப் பின்னடைவு கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது தொடங்கிவிட்டது. அந்தத் தேர்தலில் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் அரசாங்கத்துக்கு வாக்களித்தார்கள். அரசாங்கத்திற்கு ஏழு ஆசனங்கள். தமிழ்த் தேசிய கட்சிகளில் பெரியது ஆகிய தமிழரசுக் கட்சிக்கும் ஏழு ஆசனங்கள். இதனால் அரசாங்கம் தமிழ் மக்கள் தனக்கு ஆணை வழங்கியிருப்பதாக உலகம் முழுவதும் கூறித் திரிகின்றது. எனவே ஐநாவில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பின்னடைவு கிட்டத்தட்ட ஓராண்டுக்கு முன்பு நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்டுவிட்டது.

வாழ்வுரிமை இயக்கத்தின் அறிக்கையில் கூறப்பட்டிருப்பதுபோல ஐநாவின் முன்னய தீர்மானங்களில் இருந்தும் புதிய தீர்மானம் வழுக்கத் தொடங்கிவிட்டது. கடந்த 2021 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஸ்ரீலங்காவை பொறுப்பு கூற வைப்பதற்கான அலுவலகம் ஒன்று மனித உரிமைகள் பேரவையில் உருவாக்கப்பட்டது. இப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கும் புதிய தீர்மானமானது அந்த அலுவலகத்தின் பணியை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கின்றது. அந்த அலுவலகமானது சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்குரியது.அது ஒரு பன்னாட்டு அலுவலகம். அதாவது சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிக்கும் ஏற்பாடு ஏற்கனவே சர்வதேசப் பரிமாணத்தைப் பெற்றுவிட்டது. அந்த அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்குள் வருவதற்கு இன்றுவரை விசா இல்லை. அனுர ஜனாதிபதியாக வந்த பின்னரும் விசா இல்லை. மனித உரிமைகள் ஆணையாளர் நாட்டுக்கு வந்து போன பின்னரும் விசா இல்லை.

இவ்வாறு ஏற்கனவே சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிக்கும் விடயம் சர்வதேச மயப்பட்ட பின்னரும், புதிய தீர்மானமானது உள்நாட்டு விசாரணைப் பொறிமுறயை அமைத்துலக உதவிகளோடு பலப்படுத்த வேண்டும் என்று கூறுகின்றது. உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை பலப்படுத்துவதென்றால் பிறகு எதற்கு சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஒரு பன்னாட்டுக் கட்டமைப்பு? சில சமயம் ஐநா கூறக்கூடும் அது ஓர் அழுத்தப் பிரயோக உத்தி என்று.அப்படிச் சொன்னாலும் ஒரு கேள்வி உண்டு.அது எதற்கான அழுத்தம்? இலங்கையைப் பொறுப்புக்கூற வைப்பதற்கான அழுத்தமா? அல்லது இலங்கை சீன விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக மாறுவதில் அதற்குள்ள வரையறைகளை உணர்த்துவதற்கான ஓர் அழுத்தமா?

எனவே ஐநா தீர்மானத்தில் இருந்து தமிழ்மக்கள் படிக்க வேண்டியது என்னவென்றால்,மேற்கத்திய நாடுகளை நோக்கிய ஈழத் தமிழ் அரசியலானது அதாவது குறிப்பாகச் சொன்னால் ஐநாவை நோக்கிய ஈழத் தமிழ் அரசியலானது புதிய மாற்றங்களையும் புதிய வியூகங்களையும் வேண்டி நிற்கிறது என்பதுதான்.

முதலில் ஈழத் தமிழர்கள் தங்களை ஒரு தேசமாகத் திரட்டிக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ருசி கண்ட அரசாங்கம் வர இருக்கும் மாகாண சபைத் தேர்தலிலும் தமிழ் மக்களின் ஆணையைப் பெற முயற்சிக்கும். எனவே முதலில் ஈழத் தமிழர்கள் தங்களை ஒரு தேசமாகத் திரட்டிக் கொள்ளவேண்டும்.அதன்பின் உலகத்தில் தமக்கு ஆதரவான சக்திகளைத் திரட்டிக் கொள்ள வேண்டும். தங்களை ஒரு தேசமாகத் திரட்டிக் கொண்டால்தான் ஓர் அரசைப் போல சிந்திக்கலாம்செயல்படலாம்.இந்தக் கட்டுரை எந்த வாழ்வுரிமை இயக்கத்தின் அறிக்கையில் தொடங்கியதோ அதே அறிக்கையின் இறுதிப் பகுதியை இங்கு கூறி முடிக்கலாம்...

”தமிழ்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள ஈழ ஆதரவு ஆற்றல்கள் தத்தமது அரசுகளை ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக திருப்புவதில் முழு ஆற்றலையும் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக, தமிழ்நாட்டில் ஈழ ஆதரவு அரசியல் வலுப்பெற்றால்தான் இந்திய அரசின் நிலைப்பாட்டை மாற்றியமைக்க முடியும். இந்திய அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படாமல் மேற்குலக நாடுகளின் நிலைப்பாட்டில் மாற்றம் வந்துவிடப் போவதில்லை.





Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198


Radha
Since 1972
RADHA AUTO
வங்கியால்
உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை
விற்பது
எமது விசேடத்திறன்
RADHA
416.412.3838
We sold Austin Cambridge & Morris Oxford in Sri Lanka
We are selling Lexus, Mini Vans, Honda & Toyota in Canada
மிகத் தரமான
கார்களை, குறைந்த விலையில்,
நாணயமான சேவையுடன் வாங்கிட
ஒருமுறை அழையுங்கள்...
2250 Markham Road
Scarborough ON M1B 2W4
(Markham & Finch)


TORONTO
SATURDAY, OCT 18 2025 @ 5:30 PM
ARMENIAN COMMUNITY CENTER
SUNDAY, OCT 12 2025 @ 5:30PM
VANIER COLLEGE AUDITORIUM
MONTREAL
TICKETS
$100 & $50
Title Sponsor
HOMELIFE
ALPHA
REAL ESTATE LTD. BROKERAGE
Killi Chelliah BSc. Eng.
SALES REPRESENTATIVE
Dir: 416.624.7562
OFF: 416-818-0304 | FAX :647 366 9596
Gold Sponsor
Future Line Ltd
CUSTOM PVC EXTRUSION
www.futureline.ca
Silver Sponsor
Lucvaa
KITCHENS
www.Lucvaa.com
COOLMASTER.CA
COOL MASTER
REFRIGERATION
BEST CUSTOM BUILD
COMMERCIAL REFRIGERATION
416-742-0742
அன்புநெறி
Anpuneri
Humanitarian Relief Organization.
பெருமையுடன் வழங்கும்
நாத சங்கமம்
2025
WAGESHAN & HIS BAND
647-800-8742
ARMENIAN COMMUNITY CENTRE | 45 HALLCROWN PL, NORTH YORK
Thermo Care
HEATING & COOLING
BEST SERVICE
BEST WARRANTY
BEST PRICE
513 East Avenue Scarborough ON M1C 2X1
416 825 9373 | 416 640 1174
www.themocare.ca
Supreme Lube
ETOBICOKE
240 Dixon Rd
(416) 241-5588
PICKERING
1051 Brock Rd Unit 1,
(905) 426-5598
PICKERING SCARBOROUGH AIRPORT
GFORCE
CAR & TRUCK RENTAL
www.gforcerental.com
416-894-6969
ARS
construction
INTERLOCKING, DECK, FENCE, ASPHALT PAVING
BASEMENT RENOVATION
(647) 861-1979
Senthooran Punithavel
the co-operators
Babu Florist Ltd.
Temple, Wedding, Funeral & Others
Indian Malai & Jasmine Flowers Available
Call : M.Babu
416-754-8282
www.babuflorist.com
babuflorist@gmail.com
Joseph (Jude)
Project Manager
Green Field
416-986-9222
winsmart.ca
WINSMART
10 Milner Business Ct Suite 317, Scarborough
647.777.8361
GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance
DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC
7611 PINE VALLEY DR #19, WOODBRIDGE, ON L4L 0A2
416-335-3683
ALL YOUR CATERING NEEDS
நந்தா
NANTHA RESTAURANT
INDIAN / CEYLON
TAMIL RESTAURANT IN GTA
416 - 626-8421
www.nantha.com
With Best
Compliments
From
RE/MAX COMMUNITY
GAJAN
MAHAGANAPATHY
416.999.2777
J&J
GROUP
FROM
BIDDINGTON
Building Quality for Generations
Gobal Mailwaganam
1962 Yonge Street Suite 200
Toronto, Ontario M4S 1Z4



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1168

## [வரலாறும் மரபும்]

## அம்பாறை வில்லுப்பிள்ளையாட கோவில் மட்டக்களப்பு

இந்தரீதியில் கல்லோயா பரிபாலனசபையின் வேண்டுகோளுக்கிணங்க சைவப்புலவா சி.சரவணமுத்து என்பவரால் "ஊஞ்சலும் இரட்டை மணிமாலையும்" பாடப்பட்டுள்ளது. "கல்வெட்டும் திருப்பாடல்களும்" என்ற பாடல் நூல் ஆசிரியர் க. அம்பிகாபதி அவர்களால் பாடப்பட்டு, தொண்டர் சி. சிவலிங்கம் அவர்களால் வெளியிடப்பட்டது. "அம்பாறை மாணிக்க விநாயகர் திருப்பதிகம்", காரைதீவு வி. நமசிவாயம் அவர்களால் இயற்றப்பட்டுள்ளது. ஆலயத்தோடு தொடர்புடையவர்கள் அனுபவரீதியாக உணர்ந்து பாடிய இப்பாடல்கள், கண்ணெபோற் பாதுகாக்கப்படவேண்டியவையாகும்.

தற்காலத்திலே இவ்வாறான ஆலயங்களின் நிலை வேதனைக்குரியதாகக் காணப்படுகின்றது. திட்டமிட்ட குடியேற்றங்களாலும், தொடரும் வன்முறைகளாலும் இவ்வாறான நிலப்பகுதியில் அமைந்துள்ள ஆலயங்கள் மறையும் நிலை காணப்படுகின்றது. திட்டமிட்டு ஆலயங்கள் அழிக்கப்பட்டாலும் துரைசாமி போன்ற தொண்டர்கள் அவற்றை மீட்டெடுத்து நிலைநாட்டுவர் என்பதற்கு அம்பாறை வில்லுப்பிள்ளையார் கோவில் ஒரு சான்றாகக் காணப்படுகின்றது. ஆலயங்கள் ஒரு நாட்டின் அமைதியைத் தீர்மானிக்கவல்லவையாக விளங்குகின்றன என்பதை மீண்டும் பலரும் வலியுறுத்துவது சிலவேளைகளில் வியப்பாகவும் அமையலாம். இலங்கையிலே காணப்படும் அமைதியின்மைக்கு யுத்தபூமியாக விளங்குவதற்கு, ஐதீகமான ஒரு கதை நிலவுகின்றது. இக்கதை ஒரு புராணக்கதையோடு தொடர்புடையது. மனிதமுயற்சிகள் அனைத்தும் தோல்வியடையும்போது நலம் விரும்பிகளும், மெஞ்ஞானிகளும் இறைவனிடம் சரணாகதி அடைவது வழக்கம்.

அதாவது ஸ்ரீரங்கத்திலுள்ள ரங்கநாதர் கோயிலுக்கும், இலங்கைக்கும் ஒரு தொடர்புண்டு. இராம இராவண யுத்தம் முடிந்து அயோத்தியில் இராமருக்குப் பட்டாபிஷேகம் நடந்தபோது அந்தவிழாவிலே இராவணனின் சகோதரனாகிய விபீஷணன் பங்கேற்றுள்ளான். அவ்வேளையில் இராமர், ரங்கநாதர் சிலையொன்றினை விபீஷணனுக்கு அன்பளிப்புச் செய்துள்ளார். அந்தச்சிலையைத் திருச்சிவரை கொண்டுவந்த விபீஷணன் அச்சிலையை இலங்கைக்குக் கொண்டுசெல்ல முடியவில்லை. காவிரியாற்றங் கரையிலேயே அச்சிலை நிலைகொண்டுவிட்டது. ரங்கநாதர்சிலை இலங்கைக்குக் கொண்டு செல்ல வாய்ப்பில்லாமல் போனகாலந்தொட்டு, இலங்கை யுத்தமபூமியாக இருப்பதாக ஒரு ஐதீகம்.

இந்த ஐதீகத்தைத் தெரிந்து கொண்ட முன்னைநாள் ஜனாதிபதி திருமதி. சந்திரிக்கா அம்மையார் அவர்கள், சென்னையிலுள்ள கணபதி ஸ்தபதியிடம் சயனநிலையிலுள்ள ரங்கநாதர் சிலையை அமைக்கும்படி கோரியுள்ளார். அத்தோடு ஸ்ரீரங்கம் கோயிலைப்போன்று இலங்கையில் அமைக்க 25 ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டது. விபீ'ணன் கொண்டுவந்ததாகக் கருதப்படும் ஸ்ரீரங்கநாதரை விட மூன்று அடி அதிக நீளமுள்ள 16 அடி நீளம்கொண்ட சயன நிலையிலுள்ள ஸ்ரீ ரங்கநாதரை கணபதி ஸ்தபதி அவர்கள் உருவாக்கியுள்ளார்கள். கோவில் அமைப்பதற்குரிய கோபுரசிற்பங்கள், பிரகாரசந்நிதிகள் யாவும் இவரால் அமைக்கப்பட்ட வேளையில் அரசியல் மாற்றங் காரணமாக கோவில் அமைப்பு வேலைகளிலே தடங்கல் ஏற்பட்டது. பிரதிஷ்டைசெய்யும்பொழுதே கண்திறப்பது மரபு. ஸ்ரீரங்கநாதர் இலங்கைக்கு வருவதோடு அமையாது, அனைத்து மக்களையும் சமமாகப் பார்க்கும் உணர்வுக்கண்களை, உரியோர் முக்கியமாகக் கருத்தில் கொண்டால் சமாதானம் நிச்சயம் ஏற்படும் என எண்ணங் கொண்டனர்.

இலங்கையில் இனப்பிரச்சினை தொடருவதைக் கண்ணுற்ற கணபதி ஸ்தபதி அவர்கள், ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தை இலங்கையில் நிறுவுவதன் மூலம் நிச்சயமாக அமைதி நிலவும் என்ற கருத்தைக் கொண்டவராகக் காணப்பட்டார். ஐதீகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள இக்கருத்தினைச் செயற்படுத்த அரசும், இந்துசமயத்துறையும் அக்கறை கொண்டால் விடிவுண்டு என்பது ஆத்மீகவாதிகளின் நம்பிக்கையாகக் காணப்பட்டது. பல வழிகளிலும் முயற்சி செய்தும் ஏற்படாத சமாதானத்தை, ஸ்ரீரங்கநாதர் கோயிலை அமைப்பதன் மூலம் தீர்க்கமுடியும் என்பது கணபதி ஸ்தபதி போன்ற பெரியவர்களின் உறுதியான எண்ணப்பாடாக இருந்ததை அவதானிக்க முடிகின்றது. ஆனால் காலமும், காலனும் அதற்கு இடம்கொடுக்கவில்லை.

எதுவாயினும் இறைவன் எழுந்தருளியுள்ள ஆலயங்கள் மக்களின் துயர் தீர்க்கும் இடங்களாகவும், அமைதியைக் கொடுக்கும் நிலையங்களாகவும் என்றும் காணப்படுவதும், நம்பிக்கை என்ற தளத்தின்மீது மக்கள் கொண்டுள்ள ஆர்வத்தையுமே இவ்வாறான ஐதீகங்கள் வெளிப்படுத்துகின்றன. எது எவ்வாறாயினும் இறைநம்பிக்கையும், இறைவன் எழுந்தருளும் ஆலயங்களும் மக்களை நல்வழிப்படுத்தவல்லவை என்பதை மறுக்க முடியாது. இவ்வாறான ஐதீகங்கள் ஆலயங்களின் முக்கியத்துவத்தை உணர்த்துவனவாகவும் காணப்படுகின்றன.





ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


# இவ்வார ராசிபலன்

**17-10-2025 வெள்ளி தொடக்கம் 23-10-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** தொட்டது துலங்கும் வாரம். ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். பணியில் உயர்வு கிட்டும். பணிவும், துணிவும் கூடும். க்'ட காலம் மறையும். வெளியூர் பயணம் வெற்றித் தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் களைகட்டும். பெண்களின் ஆலோசனை பூர்த்தியாகும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். தொல்லை தந்தவர் விலகிடுவர். திடீர் செலவு ஏற்படும். மங்கள செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். பொது வாழ்வில் புகழ் கூடும். சோதனைகள் நீங்கும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பணியில் கண்டிப்பு தேவை. தனவரவுகள் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லை குறையும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு விலகும். ஆன்மீக சிந்தனை உருவாகும். நட்பில் பிரிவு ஏற்படும். எண்ணங்கள் மாறுப்படும். மாணவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். செல்வாக்கு பெருகும். செயலில் துணிவு கூடும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். உடல்நிலையில் கவனம் தேவை. சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். புண்ணியம் சேர்க்கும் காலம்.
வழிபட வேண்டிய தெய்வம்: அரசமரப் பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 1,9,8,4
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,P




**ரிஷபம்:** தார்மீகப் பொறுப்புகள் நிறைவேறும் வாரம். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவுகள் ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். புதிய தொழிலமையும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். பேச்சில் கம்பீரம் இருக்கும். குளிர்பான தொழிலில் கவனம் தேவை. உதவும் குணம் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணங்கள் விலகும். சிந்தனைகள் மேலோங்கும். சிரமங்கள் குறையும். ஆரோக்கியம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். எண்ணிய காரியம் கைகூடும். மன சந்தோஷம் அதிகரிக்கும். கடன் தொல்லை நீங்கும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். தேக ஆரோக்கியம் மிளிரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தன வரவில் தடங்கல் ஏற்படும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். பழையக்கடன் தீரும். பொறுமையை கையாண்டு முன் கோபத்தை குறைக்க வேண்டும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. கணவன், மனைவி உறவு சீராகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அகலும். கற்பனை ஆற்றல் பெருகும். காரியத் தாமதம் ஏற்படும். மனக்கலக்கம் உருவாகும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலன் கூடும். உறவு நன்மை தரும். பயணம் தடைப்படும். பணியாளர்களின் பாராட்டு கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கைகொடுக்கும் காமாட்சி, அதிர்ஷ்ட எண்: 7,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,C




**மிதுனம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். வெளிநாட்டுப் பழக்கம் அதிகமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சிக்கனத்தை கடைப்பிடிப்பது நல்லது. ஆடை, அணிகலன் சேரும். மன சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பேச்சுத்திறமை அதிகரிக்கும். பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். மன அமைதி குறையும். ஆதாயம் பெருகும். நல்லவர் நட்பு கிட்டும். தோற்றப் பொலிவு கூடும். செயல் திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். தொழில் லாபம் பெருகும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாளைய முயற்சி நிறைவேறும். ஊதிய உயர்வு கிட்டும். கடன் தொல்லை தீரும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆண்களின் அதிகாரம் உயரும். நினைத்தது நிறைவேறும். அனுகூலச் செய்தி வந்து சேரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாற்று மருத்துவம் பலன் தரும். உடல்நலம் சீராகும். கூடுதல் லாபம் குதூகலம் தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தாய்வழி உறவில் ஆதரவு பெருகும். பிள்ளைகளின் கல்வியால் பெருமை சேரும். திருப்பு முனை ஏற்படும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. விரோதங்கள் விலகும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். பாகப்பிரிவினை சுமூகமாகும். உற்சாகம் மேலோங்கும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். எடுத்த தொழில் முயற்சி வெற்றி பெறும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அருணாச்சலேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,1,5,3
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,F





**கடகம்:** புத்துணர்வோடு செயல்படும் வாரம். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். தாராளமான தனவரவு உண்டு. காரிய வெற்றி கிடைக்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். நிம்மதி பெருகும். பேச்சில் நிதானம் தேவை. மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை துளிர்விடும். வாழ்வில் வசந்தம் கூடும். உத்தியோக உயர்வு தாமதமாகும். தொழில் மந்த நிலை மாறும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. மருத்துவச் செலவுகள் குறையும். வரவுகள் திருப்தி தரும். புதிய சொத்துக்கள் சேரும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். செல்வாக்கு உயரும். நீண்ட நாளைய அசைகள் நிறைவேறும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பிரச்சனைகள் அகலும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைச்சல் அதிகமாகும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலம் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். புதிய தொழில் முயற்சிகளை தள்ளிப் போடவும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை தேவை. மாற்று யோசனை பயன் தரும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வார்த்தையில் நிதானம் தேவை. மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். சுபிட்ஷங்கள் பெருகும். பணியாளர்களின் ஒத்துழைப்பு தரும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் பாராட்டுக் கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பல்லவ கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Q




**சிம்மம்:** ஆன்மீகச் சிந்தனை அதிகரிக்கும். நிதி நிலைமை சீராகும். பணவரவு உண்டு. பணப்பற்றாக்குறை நீங்கும். நீண்ட நாள் பிரச்சனைகள் முடிவுக்கு வரும். கணவன், மனைவி கருத்து வேறுபாடு அகலும். பொன்னான காலமாக அமையும். தாய்வழி உறவில் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். காதல் எண்ணம் நிறைவேறும். கலையார்வம் கூடும். தனவரவில் மேன்மை உண்டு. சேய் நலம் கூடும். பேச்சில் நிதானம் தேவை. குழந்தைகளால் அல்லல் ஏற்படும். இனிப்பானச் செய்தியால் மனம் மகிழும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கமிஷன் தொழில் கவனம் தேவை. ஆரோக்கியம் சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். நல்லோர் நட்பு கிட்டும். மறைமுக எதிர்ப்பு அதிகமாகும். பக்குவமான பேச்சு பயன் தரும். குழப்பங்கள் அகலும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து உயரும். நினைத்தது நிறைவேறும். வீடு, மனை யோகம் உண்டு. ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. பால் தானம் பாவம் போக்கும். சச்சரவுகள் அகலும். தோல்விகள் விலகும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பொருள் சேதம் தரும். புதிய முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பொருள் வரவு திருப்தி தரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புக்கள் அடங்கும். பிரார்த்தனை நிறைவேறும். பித்தளைத் தொழில் லாபம் தரும். மாணவர் திறமை பளிச்சிடும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வீண் விரயம் அதிகமாகும். அரசியலில் புகழ் கூடும். கால்நடைகளால் பலன் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,1,4,9
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,X




**கன்னி:** வீண் விரயங்கள் குறையும் வாரம். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் வசூலாகும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு. பழைய நட்பு பலன் தரும். உள்ளம் மகிழும். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். நண்பர்கள் கவனம் தேவை. உலோகத்தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்ப பாசம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். ஆலய வழிபாடு ஆறுதல் தரும். புகழ்ச்சி அதிகரிக்கும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன் பிறப்புக்களால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகரிக்கும். நிர்வாகச் செலவுகள் கூடும். தொழில் வாய்ப்புகள் வந்து போகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொது பிரச்சனைகள் விலகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். வாழ்வில் வளம் உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். தோ'ங்கள் ஒதுங்கும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். வேலை பளு அதிகரிக்கும். நல்லோர்களின் பாராட்டுக்கள் கிட்டும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 6,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: வெளிர் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,H




**துலாம்:** பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும் வாரம். திடீர் பயணம் உற்சாகம் தரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். மற்றவரிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். தடைகள் விலகும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய பாக்கி வசூலாகும். வார்த்தைகளில் நிதானம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வீண்செலவு அதிகரிக்கும். வறுமைகள் அகலும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பொதுபணிகளில் ஆர்வம் கூடும். பொது வி'யங்களில் நாட்டம் ஏற்படும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொல்லைகள் அகலும். முகப்பொலிவு கூடும். இடமாற்றம் ஏற்படும். மதிப்பும், மரியாதையும் உயரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். வாழ்த்துச் செய்திகள் வரும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். வார்த்தைகளில் நிதானம் தேவை. வழக்குகள் வெற்றி பெறும். புதிய நட்பு ஏற்படும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். நீண்ட நாளைய நோய் விலகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். தேக பலம் கூடும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். தொழில் முயற்சி வெற்றி தரும். தொட்ட காரியம் ஜெயமாகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகள் கவனம் தேவை. வேண்டாத விஷயங்கள் விலகும். உடல்நலம் சீராகும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரபஞ்சக் கடவுள், அதிர்ஷ்ட எண்: 2,9,6,8
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,F

(தொடர்ச்சி 26 பக்கம்)

# தீபஒளித் திருநாள் (நிலைமண்டில ஆசிரியப்பா)

-------------------------------

தீபஒளித் திருநாள் தித்திக்கும் பெருநாள்
பாபங்கள் நீங்கிய புனித நன்நாள்
கோபங்கள் தொலையக் குளிர்ந்த நீராடி
தீபங்கள் ஏற்றியே திருப்தி கொண்டோம்
புத்துடை அணிந்து பூரிப்புப் பெற்றோம்
மத்தாப்புக் கொளுத்தி மகிழ்ச்சியும் அடைந்தோம்
கோவில் சென்று கோவிந்தனைத் தொழுது
மாவிளக் கேற்றி மனநிறைவு கொண்டோம்
பட்சணம் செய்து பகிர்ந்து உண்டோம்
விட்ட உறவுடன் விரும்பி இணைந்தோம்
சொந்தம் எல்லாம் சோதரராய்க் கூடியே!
சந்தோசம் மிகிந்திட சரசம் செய்தோம்
விருப்புடன் உணவுகள் வீட்டில் செய்தே!
விருந்தினர் அழைத்து விருந்து கொடுத்தோம்
பாட்டுப் பாடியும் பகடிகள் சொல்லியும்
ஆட்டம் போட்டும் ஆனந்தம் கொண்டோம்
சிறுவர்கள் சேர்ந்தே சீனவெடி வெடித்தனர்
சிறுமிகள் கூடியே சடுகுடு ஆடினர்
பல்லிலா பாட்டன் பாட்டிகள் எல்லாம்
செல்லக் கதையுடன் சிரித்து மகிழ்ந்தனர்
எப்போது வருமென ஏங்கும் இந்நாள்
இப்போ நினைத்தால் இதயம் இனிக்குதே!
வருடம் ஒருநாள் வந்திடும் திருநாள்
விருப்பொடு நாமெலாம் விசாகமாய் போற்றுமே!.

விகாசம் – – – – – –முகமலர்ச்சி

-------------------------------

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*

# மன்னார் தாழ்வுபாடு புனித ஜோசப் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப ஆய்வகம் மாணவர்களிடம் கையளிப்பு



- எஸ் ஆர்.லெம்பேட் (15-10-2025)

கொமர்ஷல் வங்கி மன்னார் கிளையின் நிதி உதவியுடன் மன்னார் தாழ்வுபாடு புனித ஜோசப் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப ஆய்வகம் 15ம் திகதி அன்று புதன்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு மாணவர்களின் கற்றல் செயல் பாட்டிற்காக கையளிக்கப்பட்டுள்ளது.

நான்கு மில்லியன் ரூபாய் நிதி உதவியுடன் ஒரு தொகுதி கணினிகள் மற்றும் தளபாடங்கள் வழங்கி வைக்கப்பட்ட நிலையில், அமைக்கப்பட்ட குறித்த தகவல் தொழில்நுட்ப ஆய்வகம் இவ்வாறு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் வட பிராந்திய பிராந்திய முகாமையாளர் ஜெயபாலன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர், பாடசாலை அதிபர், கொமர்ஷல் வங்கியின் மன்னார் கிளை முகாமையாளர் கங்காதரன், ஆகியோர் கலந்து கொண்டு குறித்த தகவல் தொழில்நுட்ப ஆய்வகத்தை வைபவ ரீதியாக திறந்து வைத்தனர்.



அதனை தொடர்ந்து பாடசாலை வளாகத்தில் மர நடுகையும் இடம் பெற்றது. இதன் போது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.




# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** பிள்ளைகளால் சொத்து சேரும் வாரம். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. வெளியூர் பயணம் வெற்றி தரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. மாணவர்களுக்கு சாதகமான காலம். கலைஞர்களுக்கு புகழ் கூடும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. பொறுப்புக்கள் கூடும். பணவரவு சுமாராக இருக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. சாதனையான காலம். அற்புதமான காலம். வரவுகள் பெருகும். அன்னிய தேசப்பயணம் உண்டு. திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். செய்த்தொழில் லாபம் தரும். புத்துணர்ச்சியோடு செயல்படும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். பாதகமான சூழ்நிலை விலகும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். பயணம் அனுகூலம் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மற்றவர்கள் உதவி கிட்டும். திட்டங்கள் நிறைவேறும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டைத் தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். வருமானம் திருப்தி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 9,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,H




**தனுசு:** புதிய வாய்ப்புக்கள் வரும் வாரம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். பாக்கிகள் வசூலாகும். பணவரவு மேலோங்கும். குடும்பத்தில் குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். சேமிப்பு அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் உதயமாகும். ஆழமான மேன்மைகள் அமையும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். நல்லச் செய்திகள் நாடி வரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தடைகள் முற்றிலும் அகலும். உயர்பதவி யோகமுண்டு. உற்சாகம் களைகட்டும். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும். பயணம் அனுகூலம் தரும். பாராட்டுக்கள் உயரும். ஆடை, அணிகலன் சேரும். வயிறு உபாதைகள் வந்து போகும். களவுப் போனப் பொருள் திரும்ப கிடைக்கும். காரியம் கைகூடும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். வீடு, மனை யோகம் உண்டு. பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. தொழில் போட்டி மறையும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். திருஷ்டிகள் விலகும். மாற்று மருத்துவம் பயன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகர், அதிர்ஷ்ட எண்: 5,3,9,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,J




**மகரம்:** சுபச்செய்தி வரும் வாரம். தேவைகள் பூர்த்தியாகும். அனுகூலச் செய்திகள் வரும். நட்பு வட்டம் விரிவடையும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். வணிகத்தொழில் விரிவடையும். உடல்நலம் சீராகும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. எதிரிகளின் தொல்லைகள் ஒழியும். மாணவர்கள் படிப்பில் உற்சாகம் காண்பார்கள். வீண் வம்பு விலகும். ஆபரணத் தொழிலில் கவனம் தேவை. வாயில் தேடி வாய்ப்பு வரும். வழக்குகள் சாதகமாகும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்குப் பெறுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். திறமைகள் வெளிப்படும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். பகைவர் பணிந்து நிற்பர். மதிப்பும், மரியாதையும் உயரும். பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. சுபிட்ஷங்கள் பெருகும். புதுமையை விரும்புவீர்கள். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வரவுகள் பெருகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதியைத் தரும். பெண்களுக்கு ஆபரணங்கள் சேரும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கர்ம வினைகள் அகலும். நண்பர்கள் உதவி கிட்டும். தேகப்பலம் கூடும். இல்லத்தில் அமைதி கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,M




**கும்பம்:** வியாபாரிகளுக்கு லாபம் கிட்டும் வாரம். மற்றவர்களால் உதவி கிடைக்கும். பெண்களுக்கு யோகம் உண்டு. மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். மனக்குழப்பங்கள் அகலும். திருமணம் கைகூடி வரும். பொருளாதார நிலை உயரும். தொட்ட காரியத்தில் வெற்றி உண்டு. நண்பகலில் நல்ல தகவல் வரும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப் போகும். உடல்பொலிவு கூடும். பணியில் பாராட்டு கிடைக்கும். வாகனச்செலவு ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். கண்ணாடிப் பொருட்கள் சேதம் ஏற்படும். கலக்கமான மனநிலை காணப்படும். புதிய சிந்தனை உதயமாகும். சேமிப்பு அதிகமாகும். பொறுப்புக்கள் கூடும். உல்லாசப் பயணம் இனிக்கும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். நலமே விளையும் இனிய வாரமாகும். வெளி வட்டாரப் பழக்க வழக்கங்கள் நலம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. ஏற்றுமதி தொழிலில் ஏற்றம் உண்டு. பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகமாகும். நினைத்த காரியம் நிறைவேறும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மருத்துவச் செலவுகள் குறையும். மற்ற இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால தேவைகள் பூர்த்தியாகும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கர்ப்பரக்ஷாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R




**மீனம்:** சுறுசுறுப்பு அதிகரிக்கும் வாரம். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப வி'யத்தில் கவனம் தேவை. கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம மகிழும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். புதுமைகள் நிறைந்த காலம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. ஆரோக்கியம் சீராகும். நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறும். பணியில் பாராட்டுக் கிடைக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். விலகி சென்றவர் விரும்பி வருவர். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் உண்டு. பாகப் பிரிவினை சுமூகமாகும். பொல்லாதவர்கள் தொல்லைகள் ஒழியும். எடுத்த முயற்சியில் வெற்றி பெறும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். கடன் சுமை குறையும். கனவுகள் பலிதமாகும். கலைகளில் ஆர்வம் கூடும். மனைவி வழி சொந்தம் மூலம் நன்மை உண்டு. கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். வாய்ப்புக்கள் வந்து சேரும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் உருவாகி மறையும். விரும்பிய பொருள் கிடைக்கும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. சந்தோ'ம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 9,2,1,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,R

# மொன்றியலில் நடைபெற்ற "அன்புநெறி" அமைப்பின் "நாதசங்கமம்" இசை நிகழ்ச்சி பெரும் வரவேற்பைப் பெற்றது



கடந்த ஞாயிற்றுக்கிழமை 12-10-20205 அன்று கனடா அன்புநெறி சமூக நலத்திட்ட மையத்தின் சார்பில் மொன்றியலில் நடைபெற்ற “நாதசங்கமம்” எனும் இசை நிகழ்ச்சி இசை அன்பர்களை மயக்கியதாக இருந்த்து.

எமது தாய் மண்ணாம் ஈழத்திலிருந்து வந்திருந்த புகழ்பெற்ற வீணை கலைஞர் என்.எஸ். வாகீசன் அவர்கள் அருமையான வீணை கச்சேரியை வழங்கினார். அவருடன் ஈழத்திலிருந்து வந்த தினா என்ற புல்லாங்குழல் கலைஞரும், கனடிய இசைக்கலைஞர்களும் இணைந்து இசை நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

திரு. வாகீசன் அவர்கள் தாமே இசையமைத்திருந்த பாடலுடன் தொடங்கி, பக்திப் பாடல்கள், கல்யாணி ராகத்தில் அமைந்த இளையராஜா படைப்புகள், 70, 80, 90களின் நினைவில் நிறைந்த திரைப்படப் பாடல்கள் முதல் சமீபத்திய படைப்புகள் வரை பல சிறந்த இசைப்பாடல்களை நிகழ்த்தினர். தாயகப் பாடல்களும் நிகழ்ச்சிக்கு தனிச்சிறப்பை தந்தன.

வாகீசன் அவர்களின் வீணை நாதம் மண்டபம் முழுவதும் ஒலிக்க, பார்வையாளர்கள் கரகோஷம் எழுப்பி ரசித்தனர். இடையிடையே அவர் பாடல்களின் ராகங்கள் மற்றும் தன் வீணை உருவான பயணம் பற்றியும் பகிர்ந்து கொண்டார். தினா அவர்களின் புல்லாங்குழல் இசைக்கும் பார்வையாளர்களிடமிருந்து பெரும் பாராட்டு கிடைத்தது.

நிகழ்ச்சி இரவு 11.30 வரை நீடித்து, இசை வெள்ளத்தில் மூழ்கியிருந்த பார்வையாளர்கள் “இன்னும் ஒரு பாடல்!” எனக் கேட்டுக் கொண்டே கச்சேரியை அனுபவித்தனர்.

இசை மற்றும் நடனக் கலைகள் கற்றுவரும் இளம் தலைமுறை மாணவர்கள் இத்தகைய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தங்கள் கேட்புத் திறனையும் இசை உணர்வையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என திரு வாகீசன் அவர்கள் கூறினார். “வீணை கற்கும் சிறார்கள் முதலில் மரபுத் தமிழ் இசையை நன்கு கற்றுக்கொண்டு, அதன் பின்னர் திரை இசை பாடல்களை இலகுவாக வாசிக்கலாம்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

இடைவேளையின் போது அன்புநெறி அமைப்பின் சமூகப் பணிகள் பற்றிய விளக்கமும் வழங்கப்பட்டது. இத்தகைய நிகழ்வுகளின் மூலம் கிடைக்கும் நிதி, ஈழத்தில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியாக பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. மேலும், மொன்றியாலைச் சேர்ந்த ஒரு அன்பர் உடனடியாகவே $30,000 நன்கொடை அளித்து, ஆறு வீடுகள் கட்டிட முன்வந்ததும் பாராட்டத்தக்கது.



இசை கலைஞர்களின் சமூகநலப் பங்களிப்பை ஊக்குவிக்கும் விதமாக இவ்வாறான நிகழ்வுகளுக்கு தமிழ் சமூகத்தின் இளம் சந்த்தையினர் எதிர்காலத்தில் மேலும் ஆதரவளிக்க வேண்டும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். எனினும், நிகழ்வில் கலந்து கொண்ட பார்வையாளர்களில் இளம் தலைமுறையினர் அதிகம் இருந்தது நிகழ்ச்சியின் முக்கியமான நம்பிக்கையாக அமைந்தது.



# MORTGAGE

## FINANCIAL SOLUTIONS

- COMMERCIAL
- RESIDENTIAL
- VACANT LAND
- INDUSTRIAL
- CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

**NESAN**

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளுர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

தமிழ் நிர்வாகத்தில் இயங்கும் நிறுவனம்
RIDE-U
• Airport
• Niagara Falls
• Ottawa
• Montreal
• Quebec City
• USA
rideu2025@gmail.com
(416)789-6556
BOOK NOW

உதயம் 1541 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday October 17, 2025

# கடந்த ஞாயிறு அன்று பல இனிமையான பாடல்களை ரசிகர்களுக்கு வழங்கிய "நெஞ்சம் மறப்பதில்லை" இசை நிகழ்ச்சி







கடந்த 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுரோவில் குரு யோகராஜா அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற "நெஞ்சம் மறப்பதில்லை" இசை நிகழ்ச்சியில் பிரதான பாடகர்களாக கலந்து கொண்ட "கலைமாமணி" ராமு - ரி.எம்.எஸ். செல்வகுமார்- மற்றும் பாடகி வர்சா ஆகியோரும் கனடா வாழ் பாடக பாடகிகளும் வழங்கிய அனைத்துப் பாடல்களும் ரசிகர்களை மயக்கும் வகையில் அமைந்தன என்பது ரசிகர்கள் மத்தியில் பேசப்பெறும் விடயம் ஒன்றாக உள்ளது. இங்கே காணப்படும் படங்களில் தமிழ்நாட்டுப் பாடகர்கள் மேடையில் கௌரவிக்கப்பெறுவதைக் காணலாம்.



# அனைத்துலக தமிழர் பேரவை கனடா — ஸ்காபுறோவில் நடத்திய 3 நாள் " சர்வதேச ஆராய்ச்சி கருத்தரங்கு" சிறப்பாக இடம்பெற்றது



கடந்த 10ம் திகதி வெள்ளிக்கிழமை, 11ம் திகதி சனிக்கிழமை மற்றும் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய மூன்று தினங்கள், கனடாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் அனைத்துலக தமிழர் பேரவை கனடா-ஸ்காபுறோவில் நடத்திய 3 நாள் " சர்வதேச ஆராய்ச்சி கருத்தரங்கு" சிறப்பாக இடம்பெற்றது.

முதல் நாள் நிகழ்ச்சிகளில் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினரும் இணை அமைச்சருமான விஜேய் தணிகாசலம் மற்றும் ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் நீதன் சண்முகராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்து ஆற்றிய உரைகள் அங்குரார்ப்பண வைபவத்திற்கு சிகரம் வைத்தது போன்று அமைந்தது. அன்று கலந்து கொண்ட உரையாளர்களில் பலர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பதும் அவர்கள் அனைவரும் தங்கள் துறைசார்ந்த விடயங்களை முக்கிய பொருளாக எடுத்து உரையாற்றியமை சபையோரைக் கவர்ந்தவையாக அமைந்தன.

இங்கே காணப்படும் படங்கள் 10ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற அங்குரார்ப்பண வைபவத்தின் போது எடுக்கப்பெற்றவையாகும். அன்றைய நிகழ்ச்சிகளை கென் கிருபா அவர்கள் தொகுத்து வழங்கினார். (தொடர்ச்சி 18ம் பக்கம்)

# நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் — கனடா நடாத்திய "மாவிலி வசந்தம் 2025" கலைவிழாவில் தமிழர் சமூக மைய கட்டட நிதிக்கு 10000 டாலர் அன்பளிப்பு வழங்கப்பெற்றது




நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் - கனடா நடத்திய மாவிலி வசந்தம் 2025 கலைவிழா நிகழ்வும், நூல் வெளியீடும் 11-10-2025 அன்று மார்க்கம் நகரில் உள்ள உள்ளக கலையரங்கில் வெகு சிறப்பாக நடைபெற்றது.இங்கே காணப்படும் படத்தில் ஸ்காபுறோவில் அமையவுள்ள தமிழர் சமூக மையத்தின் கட்டட நிதிக்காக ஒன்றிய அங்கத்தவர்கள் சார்பில் 10000 டாலர்கள் வழங்கப்பெறுவதைக் காணலாம். (தொடர்ச்சி 17ம் பக்கம்)

# மொன்றியலில் நடைபெற்ற "அன்புநெறி" அமைப்பின் "நாதசங்கமம்" இசை நிகழ்ச்சி பெரும் வரவேற்பைப் பெற்றது



கடந்த ஞாயிற்றுக்கிழமை 12-10-20205 அன்று கனடா அன்புநெறி சமூக நலத்திட்ட மையத்தின் சார்பில் மொன்றியலில் நடைபெற்ற நாதசங்கமம் எனும் இசை நிகழ்ச்சி இசை அன்பர்களை மயக்கியதாக இருந்தது.

எமது தாய் மண்ணாம் ஈழத்திலிருந்து வந்திருந்த புகழ்பெற்ற வீணை கலைஞர் என். எஸ். வாகீசன் அவர்கள் அருமையான வீணை கச்சேரியை வழங்கினார். அவருடன் ஈழத்திலிருந்து வந்த தினா என்ற புல்லாங்குழல் கலைஞரும், கனடிய இசைக்கலைஞர்களும் இணைந்து இசை நிகழ்ச்சியை சிறப்பித்தனர். திரு வாகீசன் அவர்கள் தாமே இசையமைத்திருந்த பாடலுடன் தொடங்கி, பக்திப் பாடல்கள், கல்யாணி ராகத்தில் அமைந்த இளையராஜா படைப்புகள், 70, 80, 90களின் நினைவில் நிறைந்த திரைப்படப் பாடல்கள் முதல் சமீபத்திய படைப்புகள் வரை பல சிறந்த இசைப்பாடல்களை நிகழ்த்தினர். தாயகப் பாடல்களும் நிகழ்ச்சிக்கு தனிச்சிறப்பை தந்தன.

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H.Selvanayagam
Broker